வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.06.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 182 | பக்கங்கள் : 16

# தொடர்ந்தும் ஏமாறமுடியாது; உச்ச அதிகாரம் வேண்டும்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் சம்பந்தன்

- மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல் இப்போதில்லை
- இடைக்கால நிர்வாக சபையே தருவேன் - ரணில்

கொழும்பு, ஜூன் 09

நாம் தொடர்ச்சியாக சுயநிர்ணய உரிமைக்காக போராடி வருகின்றோம். எமது மக்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு - அதியுயர் அதிகாரம் வேண்டும். தொடர்ந்தும் நாம் ஏமாற முடியாது. இறுதி முடிவு ஒன்றுக்கு விரைவில் வந்தாக வேண்டும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். 15

## ஊசி மூலம் ஹெரோயின் நுகர்ந்த இளம் பூசகர் பலி!

யாழ்ப்பாணத்தில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

ஊசி மூலம் ஹெரோயினை நுகர்ந்த இளம் பூசகர் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியை சேர்ந்த 26 வயதானவரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஆலயத்தில் பூசையை நிறைவு செய்த பின்னர், வீட்டுக்கு அருகிலுள்ள இடம் ஒன்றில் ஹெரோயினை ஊசிமூலம் இவர் ஏற்றியுள்ளார். அந்தச் சமயமே இவர் உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது.

உயிரிழந்த இளைஞர், போதைப் பொருளுக்கு அடிமையான 15

## வவுனியா மருத்துவர் கொலை; குற்றவாளிக்கு மரண தண்டனை

நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

வவுனியா, ஜூன் 09

வவுனியாவில் மருத்துவர் ஒருவரை சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

வவுனியாவில் கடந்த 2009 ஏப்ரல் 20ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் கடமையில் இருந்த மருத்துவர் முகைதீன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் 15

## எனக்கு நேர்ந்த அநீதிக்கு நீதி கிடைப்பது சந்தேகமே!

பாராளுமன்றில் கஜேந்திரகுமார்



கொழும்பு, ஜூன் 09

பொலிஸார் எனக்கு இழைத்த அநீதி தொடர்பில், பொலிஸார் ஊடாகவே விசாரணைகள் நடைபெறுகின்றன. எனவே, நீதி கிடைப்பதில் சந்தேகம் எழுந்துள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் 15

## சபாநாயகர் முறையற்ற செயல் கட்சித் தலைவர்கள் ஆட்சேபம்

கொழும்பு, ஜூன் 09

கஜேந்திரகுமார் கைது விடயத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நடந்து கொண்ட முறைமை தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸ, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எரான் விக்ரமரத்ன ஆகியோரே நேற்று நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினர்.

பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க புறப்பட்ட கஜேந்திரகுமார் எம்.பியை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்து அழைத்துக்கொண்டு சென்றமை வரம்பு 15



## உள்ளூராட்சி தேர்தலை நடத்த வலியுறுத்தி நேற்று போராட்டம்

கொழும்பு, ஜூன் 09

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) நேற்று தேர்தல்கள் திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

'மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதிக்கு மக்களின் கருத்தை நசுக்குவதற்கு இடமளியோம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்து' என்ற தொனிப் பொருளில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம் 15

## தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்!

கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜூன் 09

அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்தி மக்கள் தமது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கட்டானை கொச்சிக்கடை புனித அந்தோனியார் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதியை அநீதியாக மாற்றவும் ஆட்சியை சர்வாதிகாரம் ஆக்கவும் சட்டத்தை மாற்றி சமூகத்தை வழிநடத்தவும் இன்றைய தலைவர்கள் 15

## எரிபொருள் இறக்குமதி; அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு, ஜூன் 09

நாட்டில் பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்தல், சேமித்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்ட ஆர். எம். பார்க்ஸ் நிறுவனத்துடன் அரசாங்கம் நீண்டகால ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டது.

ஆர். எம். பார்க்ஸ் நிறுவனத்தின் தாய் நிறுவனமான ஷெல் நிறுவனத்துடனான இந்த ஒப்பந்தம் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று மாலை கைச்சாத்திடப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில், சீனாவின் சினோபெக் நிறுவனத்து 15

## கஜேந்திரகுமார் கைது விவகாரம் சபையில் நேற்று கடும் விவாதம்!

கொழும்பு, ஜூன் 09

கஜேந்திரகுமார் எம். பி. கைது விடயத்தில் பொலிஸார் கடமைகளை சரிவர செய்தனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். இதையடுத்து, டிரான் அலஸுடன் கஜேந்திரகுமார், சுமந்திரன் ஆகியோர் கடுமையாக வாதிட்டனர். இதனால் நேற்று சபை சிறிது நேரம் அமைதியற்று காணப்பட்டது.

கஜேந்திரகுமார் எம். பியின் கைது குறித்து பாராளுமன்றத்தில் நேற்று விளக்கமளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், "நான் கடந்த 2 ஆம் திகதி மருதங்கேணியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான காணொலிகளைப் பார்த்தேன். அதில் 15

## இடைக்கால நிர்வாக யோசனைக்கு அரசாங்கம் சாதகமான நிலைப்பாடு

விரைவில் அடுத்த கட்ட பேச்சு என்கிறார் விக்னேஸ்வரன்



கொழும்பு, ஜூன் 09

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது தொடர்பான பிரதமருடனான கலந்துரையாடல் திருப்தியளித்துள்ளது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் இயங்காத நிலையில் அவற்றுக்கு பதிலாக வடக்கு, கிழக்கு மாகாணங்க 15

# யாழ். - இரத்மலானை விமான சேவை; இந்திய நிறுவனம் ஈடுபடத் திட்டம்!

கொழும்பு, ஜுன் 09

இந்தியாவின் விமான சேவை நிறுவனமான அலையன்ஸ் எயார் இந்தியாவுடன் இணைந்து யாழ்ப்பாணம், இரத்மலானை விமான நிலைய செயல்பாடுகளை அதிகரிப்பது தொடர்பான அலையன்ஸ் விமான அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களை அதிகரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்துக்கும் இரத்மலானைக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இதன்போது ஆரயப்பட்டன.

அலையன்ஸ் எயார் இந்தியா குழு இந்தத் திட்டத்துக்கு விருப்பம் தெரிவித்ததுடன் மேலும் விமான நிறுவனம் பரிந்துரைகளை பரிசீலிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 18 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜுன் 09

யாழ்ப்பாணத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட 18 பேரை தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கைதானவர்களிடமிருந்து 669 கடலட்டைகள், 6 டிங்கி படகுகள், நீர்மூழ்கி கருவிகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# 3 தொன் ஹெரோயினை அழிப்பதில் புதிய சிக்கல்

கொழும்பு, ஜுன் 09

கடந்த 3 வருடங்களில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சுமார் 3 தொன் ஹெரோயினை அழிப்பது தொடர்பில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் கையிருப்புகளை 1000 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் எரிக்க வேண்டும். ஆனால், அதற்கான இடம் இல்லாததால் ஹெரோயின் கையிருப்பு சேகரிக்கப்படுவதாக பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தேசிய பாதுகாப்பு துறை கண்காணிப்பு குழுவில் தெரிவித்துள்ளார்.

இந்த ஹெரோயின் கையிருப்புகளை ஆழ்கடலில் மூழ்கடிக்க முடியும். ஆனால் அதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, 2020ஆம் ஆண்டு முதல் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் கையிருப்பு இன்னமும் அப்படியே இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# வினாத்தாளை வட்ஸ் அப்பில் அனுப்பி விடைபெற்று எழுதிய மாணவி சிக்கினார்

கொழும்பு, ஜுன் 09

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் தோற்றிய மாணவி ஒருவர் கணிதப் பாட வினாத்தாளைப் படம் பிடித்து வட்ஸ்அப் மூலம் ஆசிரியர் ஒருவருக்கு அனுப்பி அவரிடமிருந்து அதற்கான பதிலை பெற்று விடை எழுதிய சம்பவம் ஒன்று மொனராகலை - பிபிலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தேசிய பாடசாலை ஒன்றில் நடைபெற்றுள்ளுது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவதானித்த பரீட்சை மண்டப ஆசிரியர் ஒருவர் மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இதனையடுத்து, பிபிலை வலயக் கல்விப் பணிப்பாளர் கே. ஜே. சுசில் விஜேதிலகவின் ஆலோசனையின்பேரில் மகியங்கனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எம். எஸ். டயஸ், அந்த மாணவி பயன்படுத்திய கைபேசியை கைப்பற்றியதுடன் இதனுடன் தொடர்புடைய ஆசிரியரை பிபிலை கல்வி வலயத்துக்கு அழைத்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன!

கொழும்பு, ஜுன் 09

சதொச நிறுவனம் 10 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைத்துள்ளது.

இதன்படி, பின்வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் நுகர்வோர் இந்த பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்படி, பயறு 1 கிலோ ரூ. 1,225, செத்தல் மிளகாய் 1 கிலோ ரூ. 1290, மைசூர் பருப்பு 1 கிலோ ரூ. 299, சிவப்பு நாட்டரிசி 1 கிலோ ரூ. 200, நெத்தலி 1 கிலோ ரூ. 1,140, கோதுமை மாவு 1 கிலோ ரூ. 200, சோயா மீற் 1 கிலோ ரூ. 650, சிவப்பு பச்சரிசி ரூ. 139, கடலை 1 கிலோ ரூ. 540, வெள்ளை சீனி 1 கிலோ ரூ. 225 விற்பனை செய்யப்படவுள்ளன. (ஐ)

# மசாஜ் நிலையங்களில் சோதனை 12 பெண்கள் உட்பட 16 பேர் கைது

கொழும்பு, ஜுன் 09

கொழும்பு - கடுவலை நகரில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் விபசார விடுதிகளாக செயல்பட்ட 4 இடங்களில் சோதனை நடத்தி 12 பெண்கள் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

கிடைக்கப்பெற்ற பல முறைப்பாடுகளின் அடிப்படையில் கடுவலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் வீரசிங்கவின் பணிப்புரையின் பேரில் நீதிமன்றத்தில் பெறப்பட்ட அனுமதியின் பேரில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 12 பெண்களும் முகாமையாளர்களாக பணியாற்றிய நான்கு ஆண்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிதிவெல, பலாங்கொட, ஹங்வெல்ல, பியகம, பொலநறுவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும் இவர்களில் திருமணமான பெண்களும் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சமைத்து உணவு நஞ்சானதில் பெண் பலி; 3 பேர் ஆபத்து நிலையில்!

### மட்டக்களப்பில் நேற்று துயரம்

மட்டக்களப்பு, ஜுன் 09

சமைத்து உண்ட உணவு நஞ்சானதில் 27 வயது பெண் உயிரிழந்தார். பாதிக்கப்பட்ட 3 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மாங்காடு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மாங்காட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான 27 வயதுடைய உயேந்தினி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் சம்பவதினமான நேற்று மதிய உணவை உண்ட பின்னர் 2 மணியளவில் இதில் உயிரிழந்த பெண் மற்றும் அவரது 4 மற்றும் 7 வயது இரு குழந்தைகள் அவரின் தாயார் உட்பட 4 பேர் வாந்தியெடுத்த நிலையில் மயக்கமடைந்தனர்.

அவர்களை களுவாஞ்சிக்குடி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் 27 வயதுடைய பெண் உயிரிழந்தார். ஏனைய 3 பேரும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கை - இந்தியா உறவால் பாதுகாப்புத் துறை வளர்ச்சி!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜுன் 09

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சிறந்த இருதரப்பு உறவுகளால் பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பு பல ஆண்டுகளாக தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

மேலும், கடந்த பத்தாண்டுகளில் இந்திய பாதுகாப்புத் துறையின் முன்னேற்றத்தால் இந்தியாவிலிருந்து பாதுகாப்பு தொடர்பான வன்பொருள் கொள்முதலானது புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு ஏற்றுமதி ஊக்குவிப்பு கருத்தரங்கு மற்றும் இரு நாட்டு உற்பத்தி பொருட்கள் கண்காட்சி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உரையாற்றுகையில் ,

எமது அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் திறன்களை வளர்த்துக் கொள்வதிலும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். அனைத்துக் துறைகளிலும் இலங்கையுடனான ஒத்து ழைப்பை பெறுமதி வாய்ந்ததாக கருதுவதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியா - இலங்கை பாதுகாப்பு கருத்தரங்கு - கண்காட்சியானது பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையே சிறந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது.

மேலும், உள்ளூர் கைத்தொழில்கள், இலங்கை பாதுகாப்பு படைகளால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வாகனங்களை காட்சிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட இந்திய தொழில்துறை நிபுணர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் இந்த நிகழ்வானது இலங்கைக்கு சிறந்த வாய்ப்பாக அமையும் என தாம் நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை திறம்பட எதிர்கொள்ள படைகளை தொடர்ந்து நவீனமயமாக்குவதன் மூலம், இந்த முன்னேற்றங்களில் முன்னணியில் இருப்பது அவசியம் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இரு ஆலயங்கள் உடைக்கப்பட்டு தாலிகள், கண்மலர்கள் திருட்டு!

கொழும்பு, ஜுன் 09

நுவரெலியா - லுணுகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு பகுதிகளில் ஆலயங்கள் உடைக்கப்பட்டு உண்டியல், அம்மன் தாலி உள்ளிட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

எல்டராடோ தோட்டத்தின் கன்னி மாரியம்மன் பத்தினி ஆலயம் உடைக்கப்பட்டு அம்மன் சிலைகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த 3 தாலிகள், தாலி பொட்டுகள், கண் மலர்கள், உண்டியல், இலத்திரனியல் உபகரணம் என்பன களவாடப்பட்டுள்ளன என்று லுணுகலை பொலிஸ் நிலை யத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதேவேளை, லுணுகலை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தாலி, தாலி பொட்டு மற்றும் உண்டியல் என்பனவும் களவாடப்பட்டுள்ளன.

கொள்ளை சம்பவங்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். லுணுகலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu 09.06.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# பேசிக்கொண்டே இருப்பதா?

மீண்டும் தமிழ் தேசிய கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றிருக்கின்றது. இது போன்ற பேச்சுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் துளியளவுகூட நம்பிக்கை காணப் படவில்லை - தவிர, மக்கள் இதுபோன்ற விடயங்களை கரினையுடன் நோக்கவுமில்லை. பேச்சுகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டு மாயின், அதனை எவ்வாறு - எந்த அடிப்படையில் முன்னெடுக்க வேண்டுமென்று 'ஈழநாடு' ஏற்கனவே தெளிவாகக் குறிப்பிட்டு வந்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான நிலைப் பாட்டுடன் வரவேண்டும் என்று சம்பந்தன் கூறியிருந்ததை மேற்கோள் காட்டி, ஏற்கனவே 'ஈழநாடு' முன்னைய தலையங்கத்தில் ஒருவேளை, ரணில் வராவிட்டால் தமிழ் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன - அதேவேளை, அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தது.

அரசாங்கம் விடயங்களை மாறி, மாறி பேசிவருகின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி, அதிலிருந்து முன்னோக்கி பயணிப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசியிருந்தார். அதனைத் தொடர்ந்து, எதிர்பார்க்கப்பட்டவாறே தென்பகுதியில் பௌத்த பிக்குகள் வீதிகளில் இறங்கி தங்களின் எதிர்ப்பை வெளியிட்டனர். அதன் பின்னர் தமிழ் கட்சிகளோடு இடம்பெற்ற சந்திப்பின்போது புதிய அரசியல் யாப்பு தொடர்பிலும் ரணில் பேசியிருந்தார். அரசமைப்பிலுள்ள விடயங்களையே அமுல்படுத்த முடியாதபோது, அதனையும்விட கூடுதல் அதிகாரங்களை வழங்கக்கூடிய புதிய அரசியல் யாப்பை எவ்வாறு கொண்டு வர முடியும்? இதற்கு எவரிடம் பதிலுண்டு? இதற்கிடையில் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட அவ்வப்போது மாறுபட்ட அபிப்பிராயங்களை இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்து வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் வடக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவுள்ளதான செய்தியொன்றை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டிருந்தது. தற்போது, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அவ்வாறான திட்டங்கள் எவையுமில்லை என்றும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எந்தவொரு உள்ளக கலந்துரையாடல்களும் நடைபெறவில்லை எனவும் விஜயதாஸ தெரிவித்திருக்கின்றார். இதுவரையில் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்க மட்டத்தில் உரிய தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லையாயின், பேச்சுகளின் மூலம் அரசாங்கம் அடைந்துகொள்ள முயற்சிப்பது என்ன? வெறும் காலத்தை கடத்துவது மட்டும்தானா?

இங்கு விடயம் - 13ஆவது திருத்தச்சட்டம் பற்றியதோ அல்லது காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது பற்றியதோ அல்ல - மாறாக, இதுவரையில் இடம்பெற்ற பேச்சுகள் மூலம் சாதிக்கப்பட்ட விடயங்கள் என்ன? எவையுமே இல்லையென்றால் பேசிக்கொண்டே இருப்பதன் பொருள் என்ன? ஒன்றில் 13ஆவது திருத்தச்சட்டத்தை புறம்தள்ளிவிட்டு அதனை விடவும் மேலான - கூடுதலான நன்மைகளை தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடியதொரு தீர்வு தொடர்பில் சிந்திக்க வேண்டும். அதுதான் அரசாங்கம் விரும்புகிறது என்றால், அதற்கான அரசியல் உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்தின் பக்கத்திலேயே இருக்கின்றது.

ஒற்றையாட்சி நீக்கப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை காண வேண்டுமென்பதுதானே தமிழ்த் தேசிய கட்சிகளின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. ஆனால், முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டிய - அதனை நிரூபிக்க வேண்டிய அரசாங்கமோ - இதுவரையில் செயலில் எதனையும் நிரூபிக்காத நிலையில் பேச்சுகளை தொடருவதிலுள்ள பயன் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் சிந்திக்க வேண்டும். அல்லது அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து -கீழிறங்கிவரச் செய்யும் உத்திகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அல்லது வெளியாரின் உதவிகளை பெற்று முன்னோக்கி நகருவது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# ரோசி சேனநாயக்கவுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு குழுவில் முறைப்பாடு

*கொழும்பு, ஜூன் 09*

*கொழும்பு மாநகர முன்னாள் மேயர் ரோசி சேனநாயக்கவுக்கு எதிராக அந்த மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் குழு ஒன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.*

*கொழும்பு நகர முன்னாள் மேயர் ரோஸி சேனநாயக்க மேயர் பதவி நீக்கப்பட்ட போதிலும் அவர் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே தங்கியிருக்கிறார் என்றும் அரச சலுகைகளை அனுபவிக்கிறார் எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.*

*"கொழும்பு நகர முன்னாள் மேயர் ரோஸி சேனநாயக்க அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்னும் வசிக்கிறார். இப்போது அவர் மேயர் இல்லை. சாதாரண வேட்பாளர் . ஆனாலும் அவர் இன்னும் அங்கே வசிக்கிறார். இது முறைகேடானது .*

*அவரின்பதவிக்கு காலம் முழுவதும் மின்கட்டணமாக 91 இலட்சம் ரூபாய்களை அரசாங்கம் செலுத்தியுள்ளது. சராசரியாக மாதாந்தம் 2 இலட்சம் ரூபாய் மின் கட்டணம் வருகிறது. இது மக்களின் வரிப்பணம் . கொழும்பு வாழ் மக்கள் பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்படுகின்றனர். வீதி விளக்கு ஒன்று உடைந்தால் மாற்றுவதற்கு 6 மாதங்களாகிறது. ஆனால், மாநகர சபை மேயரின் தேவைகளை நிறைவேற்றுகிறது.*

*மேலும் நான்கு சேவையாளர்கள் போதுமான நிலையில் ரோசிக்கு 9 சேவையாளர்கள் வழங்கப்பட்டுள்ளனர். எனவே மக்களின் பணம் இவ்வாறு மோசடி செய்யப்படுவது குறித்து முறைப்பாடு அளித்துள்ளோம்" என்று முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)*

# தங்கநகையை திருடியவர் இரு மணிநேரத்தில் கைது!

*வடமராட்சி, ஜூன் 09*

*வீடு உடைத்து ஐந்தரை பவுண் சங்கிலியை திருடிய சந்தேகநபரை இரண்டு மணித்தியாலத்துக்குள் கைது செய்த பொலிஸார், நகையையும் மீட்டனர்.*

*நேற்று முன்தினம் பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியின் வீடு ஒன்றில் வீட்டில் எவரும் இல்லாத சமயம் கதவை உடைத்துப் புகுந்த திருடன் ஐந்தரை பவுண் சங்கிலி, கைபேசி என்பவற்றை திருடிச் சென்றுள்ளார்.*

*இந்த சம்பவம் குறித்து அறிந்த உடனேயே வீட்டார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இரு மணி நேரத்திலேயே பொலிஸார் சந்தேகநபரை பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவில் வைத்துக் கைது செய்தனர்.*

*சந்தேகநபரிடமிருந்து நகையை மீட்ட பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)*

## "மகேந்திரனின் நியமனம் சட்டரீதியானது"

*கொழும்பு, ஜூன் 09*

*2015ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜூன் மகேந்திரன் நியமிக்கப்பட்டமை சட்டரீதியானது மற்றும் அரசமைப்புக்கு உட்பட்டது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசேகர எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.*

*மகேந்திரன் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டாரா என பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி எழுப்பிய மற்றுமொரு கேள்வி வாதங்களை ஏற்படுத்தியது.*

*"பத்திர மோசடி தொடர்பாக பல நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதை பாராளுமன்ற உறுப்பினர் அறிந்திருக்கவேண்டும்" என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.*

## ஊழலுக்கு எதிரன உத்தேச சட்டம் 21இல் விவாதம்

*கொழும்பு, ஜூன் 09*

*ஊழலுக்கு எதிரான உத்தேச சட்டமூலம் எதிர்வரும் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளது.*

*நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)*

# வாள் உருவாக்கிய நால்வர் கைதாகினர்


*யாழ்ப்பாணம், ஜூன் 09*

*காங்கேசன்துறையில் வாள் தயாரித்துக் கொண்டிருந்த நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடொன்றில் வைத்து வாள் செய்து கொண்டிருக்கின்றனர் என்று பொலிஸாருக்கு நேற்றைய தினம் கிடைக்கப்பெற்றது. இந்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அந்த வீட்டை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.*

*இதன்போது, 4 பேரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 09 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 26
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சஷ்டி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். உடல் நிலை சீராகும். எதிர்பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். பொறுமை தேவைப்படும்.

**கடகம்**
சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு.வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மீனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# ஜனநாயக கட்சிகளை பா. ஜ.கவுக்கு எதிராக ஒன்றிணைக்க வேண்டும்

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, ஜூன் 09

பா. ஜ. கவுக்கு எதிராக ஜனநாயக கட்சிகளை ஒன்று சேர்க்க வேண்டும் என முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பேசினார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை ஓராண்டு முழுவதும் கொண்டாட தி. மு. க. முடிவு செய்துள்ளது. அதன்படி, கருணாநிதியின் நூற்றாண்டு தொடக்க விழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பநிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்,

“கட்டுமரமாக மிதப்பேன் அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம் கவிழ்த்து விடமாட்டேன் என்று சொல்லி 95 வயது வரை வாழ்ந்த தமிழின தலைவர் நூற்றாண்டு விழா. முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிரின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு ஜூன் மூன்றாம் திகதி கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால், ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட ரயில் விபத்து காரணமாக ஜூன் மூன்றாம் திகதி நடைபெற இருந்த இந்த நிகழ்ச்சியை ஒத்தி வைக்க நேர்ந்தது.

அன்று நடைபெறுவதாக இருந்த அத்தனை நிகழ்ச்சிகளும்




இரத்து செய்யப்பட்டது. அதனைத்தான் கருணாநிதி விரும்பி இருப்பார். 95ஆவது ஆண்டு வரை வாழ்ந்த கருணாநிதி இன்னும் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் இன்று இங்கு இருந்திருப்பார். முதுமையின் காரணமாக நம்மை விட்டு பிறந்தார்.

பிரிந்தார் என்று சொல்வதை விட எங்கும் இருந்து நம்மை கவனித்து வருகிறார் என்று தான் கூற வேண்டும். எந்த நிகழ்ச்சி எந்த விழா எந்த நிலைப்பாடு எடுத்தாலும் எங்கும் இன்று நம்மை கவனிக்கிறார் என்றுதான் நான் நாள்தோறும் நினைத்து வருகிறேன். இந்த மேடையில் கருணாநிதி அமர்ந்து கொண்டிருக்கிறார் என்பதை எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

ஓராண்டு முழுவதும் கலைஞரின் நூற்றாண்டு விழா பிறந்த நாள் விழாவை கொண்டாட இருக்கிறோம். திராவிட மொடல் கோட்பாடுகளுடன் ஆட்சியை நடத்துகிறோம் என்றால் அதற்கு அடித்தளம் இட்டு நடத்தியவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி . திராவிட மொடல் என்ற சொல்லைக் கேட்டு சிலர் பயப்படுகிறார்கள். எல்லாருக்கும் எல்லாம் கிடைத்து விடக்கூடாது என்பவர்கள், தான் திராவிட மொடலை எதிர்த்து வருகிறார்கள். திராவிட மொடல்தான் தமிழ்நாடு என்ற மாநிலத்தை தலைசிறந்த மாநிலம் என்று காட்டக் கூடியது.

அடுத்த ஆண்டு நடைபெறுகின்ற தேர்தல் நமக்காக இல்லை நாட்டுக்காக என்று உறுதி எடுப்போம் - சபதம் எடுப்போம். வருகின்ற 23ஆம் திகதி பீகாரில் நடைபெறும் எதிர்கட்சிகள் கூட்டத்தில் பங்குபெறுமாறு அந்த மாநில முதலமைச்சர் நிதீஷ் குமார் அழைப்பு விடுத்திருக்கிறார்” - என்றார். (ஐ)

# விஜயின் மாணவர் சந்திப்பு 2026 தேர்தலுக்கான அச்சாரமா?

சென்னை, ஜூன் 09

தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தொகுதி வாரியாக 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை நடிகர் விஜய் சந்தித்து ஊக்கத் தொகை வழங்கவுள்ளார். சென்னை நீலாங்கரையில் இந்த நிகழ்ச்சி வரும் 17ஆம் திகதி நடக்கவுள்ளது.

நடிகர் விஜயின் மக்கள் இயக்கம் அரசியல் இயக்கமாக மாறி வருகிறது. அரசியலுக்கு வருவதாக அவர் வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அவரது இயக்கம் மற்றும் அவரது செயல்பாடுகளால் விரைவில் விஜய் அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள், பொது மக்கள் இடையே அதிகரித்துள்ளது.

பனையூரில் உள்ள அலுவலகத்தில் இயக்க நிர்வாகிகளை அவ்வப்போது சந்திக்கும் விஜய், இயக்கத்தை விரிவுபடுத்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். அவரின் அறிவுறுத்தலின்படி, அம்பேத்கர் பிறந்தநாளன்று அவரது சிலைக்கு மக்கள் இயக்க நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இப்தார் நிகழ்ச்சிகளை நடத்தினர். கடந்த மாதம் 28ஆம் திகதி உலக பட்டினி தினத்தில் 234 தொகுதிகளிலும் ‘தளபதி விஜய் ஒரு நாள் மதிய உணவு சேவையகம்’ திட்டம் மூலம் ஏழைகளுக்கு மக்கள் இயக்க நிர்வாகிகள் மதிய உணவு வழங்கினர்.

இந்நிலையில், வரும் 17ஆம் திகதி தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தொகுதி வாரியாக 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை விஜய் சந்திக்க இருக்கிறார்.

நடிகர் விஜய், முதல்முறையாக, மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோரை சந்திக்க உள்ளார். 2026இல் நடக்கவுள்ள தமிழகசட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு முன்பு தீவிர அரசியலுக்கு வர விஜய் திட்டமிட்டுள்ளார். அதற்கான அச்சாரமே இது என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் கடந்த உள்ளாட்சி தேர்தலில் மக்கள் இயக்க வேட்பாளர்கள் பல இடங்களில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மண்சார்ந்த கலைஞர்கள் மட்டும்தான் தமிழ், தமிழ்நாடு சார்ந்து பேசுகின்றனர்!

## கனிமொழி எம். பி. தெரிவிப்பு

சென்னை, ஜூன் 09

‘சங்கத்தமிழுக்கு பிறகு, தமிழிலும் தமிழ்நாட்டிலும் மக்களை பற்றி பேசுவது மண் சார்ந்த கலைஞர்கள் மட்டும்தான்’ கனிமொழி எம். பி. தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் ஆவடி அருகே அயப்பாக்கத்தில் கிராமிய கலை விழா நடைபெற்றது.

இதில் கனிமொழி எம்.பி. பங்கேற்று பேசும்போது, தமிழிலும் தமிழ்நாட்டிலும் மக்களை பற்றி பேசுவது, மண் சார்ந்த கலைஞர்கள் மட்டும்தான். நம்முடைய பாரம்பரியம், தமிழ் மண் சார்ந்த கலைஞர்கள் நிகழ்த்தும் கலை வடிவங்களில் மட்டும்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால்தான், இந்த மண் சார்ந்த கலைஞர்களை முன்னாள் முதல்வர் கருணாநிதி ஒவ்வொரு நாளும் நேசித்தார்.

தமிழ் மண் சார்ந்த கலைஞர்களை மிகப்பெரிளவில் கொண்டாடிய - மதித்த - உணர்ந்து புரிந்து கொண்டவர் அவர். தற்போது அவருடைய நூற்றாண்டு விழாவில் கிராமிய கலைஞர்களை அழைத்து மீண்டும் சமூகத்தை பற்றியும் நாட்டை பற்றியும் அக்கறையுடன் செய்திகளை சொல்லுங்கள் என கிராமிய கலை விழாவை நடத்தி கொண்டிருக்கிறோம் - என்றார்.

# கொரியா இலங்கைக்கு வழங்கும் உதவிகளை பாராட்டினார் பிரதமர்



கொழும்பு, ஜூன் 09

பல துறைகளுக்கு உதவிகளை வழங்குவதன் மூலம் தென்கொரியா தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பூசான் நகரசபை பணிப்பாளர் நாயகம் யூ ஜங் சோவை நேற்று முன் தினம் அலரி மாளிகையில் சந்தித்தபோதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

அதன்படி, கொரிய குடியரசு மற்றும் அதன் நன்கொடை நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி மன்றங்கள் இலங்கைக்கு உதவ பல நலன்புரி நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றன. கொரிய குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான நட்புறவும் இரு தரப்பு உறவுகளும் தற்போது குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்து வருவதாகவும், கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மற்றும் கலாச்சார உறவுகள் உட்பட இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு உயர் மட்டத்தில் இருப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் முதலீடு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பை கொரியா அதிகரிக்கும் என கொரிய ஜனாதிபதியின் சிரேஷ்ட செயலாளர் (அரசியல் விவகாரங்கள்) விசேட பிரதிநிதி லீ ஜின் பொக் தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பத்தில் இளைஞர்களின் திறன் விருத்திக்கு மேலும் ஆதரவு வழங்கப்படும் என்று கூறிய அவர், தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப பயிற்சி மையங்களுக்கு கொரிய தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் கற்பித்தல் வசதிகளை விரிவுபடுத்த முடியும் என்றும் தெரிவித்தார். (அ)

# திடீரென உயிரிழந்த காகங்கள்!



கொழும்பு, ஜூன் 09

புத்தளம் - நெடுங்குளம் வீதியின் குடியிருப்புப் பகுதியில் சுமார் 50ற்கும் அதிகமான காகங்கள் திடீரென்று உயிரிழந்துள்ளன.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் புத்தளம் பிரதேச மிருக வைத்திய அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினர்.

விரைந்து வந்த மிருக வைத்திய அதிகாரிகள் உயிரிழந்த காகங்களை பார்வையிட்டனர்.

உயிரிழந்த காகத்தின் மாதிரிகளை பகுப்பாய்விற்காக பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, இப்படி அதிகமான காகங்கள் உயிரிழந்து இருப்பது அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வரலாற்றில் அதிகளவாக 2022ஆம் ஆண்டு 13.1 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானம்

கொழும்பு, ஜூன் 09

கடந்த 2022ஆம் ஆண்டில் வரலாற்றில் அதிகளவான ஏற்றுமதி வருமானமாக 13.1 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அதன்படி, இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதன் ஊடாக நாட்டின் கைத்தொழில்களில் பெரும் முன்னேற்றம் காணப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.


அமைச்சர் தலைமையில் கைத்தொழில் தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழு பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கார் மற்றும் ஓட்டோக்கள் பொருத்தும் தொழிலாளர்கள் 22 பேர் பணியாற்றி வருவதாகவும், அடையாளம் காணப்பட்ட 20 துறைகளில் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள், களிமண், முந்திரி, கரும்பு, மூங்கில் போன்ற பல்வேறு தொழில்கள் தொடர்பான பல பிரச்னைகள் உறுப்பினர்களால் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

மேலும், இவை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். (அ)

# இந்தியாவுக்காகக் கனடாவை கடுமையாக சாடும் இலங்கை



இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ருவீட் செய்துள்ளார்.

கொழும்பு, ஜூன் 09

**முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் கொலையை பொதுவெளியில் பெருமைப்படுத்த அனுமதித்ததற்காக கனடாவை இலங்கை கடுமையாக சாடியுள்ளது.**

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் கொலையை கனடாவில் உள்ள காலிஸ்தானிய தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகள் பகிரங்கமாக பெருமைப்படுத்திய சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கருத்துச் சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மையை மேம்படுத்துதல் என்ற பெயரில், எந்த நாடும் பயங்கரவாதிகளுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் புகலிடங்களை வழங்கமுடியாது.

பயங்கரவாதத்தை பெருமைப்படுத்த அனுமதிப்பதன் மூலம், மற்றொரு தலைமுறை இளைஞர்கள் விரக்தியை நோக்கி தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்று கூறியுள்ளார்.

1984 ஒக்ரோபர் 31ஆம் திகதி தமது சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களால் இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்.

சீக்கிய பொற்கோயிலுக்குள் படைகளை அனுப்பியமைக்கு பழிவாங்கும் செயலாகவே இந்த கொலை கருதப்படுகிறது.

இந்நிலையில் இதனை பெருமைப்படுத்தும் வகையிலேயே கனடாவில் காலிஸ்தானிய பிரிவினைவாதிகள், பொதுவெளியில் இந்திரா காந்தியின் உருவப் பொம்மை மீது, இரண்டு சீக்கிய மெய்க்காவலர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்துவதை போன்ற உருவங்களைக் காட்சியப்படுத்தியிருந்தனர். (அ)

# மேஜர் அஜித் பிரசன்னவுக்கு மேலும் 6 மாத கடூழிய சிறை!

கொழும்பு, ஜூன் 09

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் மேஜர் (ஓய்வு பெற்ற) அஜித் பிரசன்னவுக்கு 06 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தற்போதையஅனுபவித்து வரும் நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை முடிவடைந்த பின்னர் இந்த சிறைத்தண்டனை நடைமுறைக்கு வரும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

குற்றவாளியான அஜித் பிரசன்ன, இனிவரும் காலங்களில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிடமாட்டார் என நம்புவதாக நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சிறைத்தண்டனையில் இருந்து விடுதலையாகிச் செல்லும் தினத்தில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிடக்கூடாது எனவும் நீதியரசர் எச்சரித்துள்ளார்.

கடந்த 2019 டிசெம்பர் 06 மற்றும் 08 ஆம் திகதிகளில் வலையொளி அலைவரிசையில் பல நீதவான்களின் தீர்ப்புகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி, பிரதிவாதி அஜித் பிரசன்னவுக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.


குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய அஜித் பிரசன்ன, இனிமேல் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் எந்தக் கருத்தையும் வெளியிடப் போவதில்லை என உறுதியளித்துள்ளார்.

வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதியரசர்கள், நீதிமன்றத்தை அவமதித்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு அஜித் பிரசன்ன குற்றவாளி என தீர்மானித்தனர்.

இதனையடுத்து ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தனர். (அ)

# ஒரு வாரத்தில் மட்டும் 2479 டெங்கு நோயாளர்

## தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு



கொழும்பு, ஜூன் 09

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் 2479 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 41883 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 22.1 வீதமான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் 21 வீதமான டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தற்போது 67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

வருடத்தின் இதுவரையான காலப்பதிக்குள் 25 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். (அ)

# குழந்தைகள் அழும்போது கைபேசிகள் வழங்காதீர்!

## பார்வை இழக்கப்படும் அபாயம்

கொழும்பு, ஜுன் 09

**முதலாம் தரத்தில் பிரவேசித்த மாணவர்களுக்கென பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கண், பற்கள் மற்றும் காது தொடர்பான பரிசோதனையின்போது ஆறு பிள்ளைகளுக்கு, 10 மற்றும் 12 மீற்றர் இடைவெளியில் உள்ள எழுத்துக்களை வாசிக்க முடியாமல் போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.**

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் அழும் போது ஆறுதல் கூறவும், அவர்களுக்கு உணவளிக்கவும், மருந்து மற்றும் திரவங்களை வழங்கவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்கி வருவதாக சுகாதாரத் துறை மற்றும் ஆசிரியர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது செய்யக்கூடாத ஒன்று எனவும் இதனால் எதிர்காலத்தில் பிள்ளைகளின் கல்வி கூட பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வைத்தியர்களின் தலையீட்டில் பிள்ளைகளை மேலதிக பரிசோதனைக்கு உட்படுத்தி உரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்களின் பாவனையே சிறு பிள்ளைகளின் கண் கோளாறுகளுக்குக் காரணம் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் முன்னாள் கண் வைத்திய நிபுணர் வைத்தியர் தர்மா இருகல்பண்டார தெரிவித்தார். (அ)

# மாத இறுதி வரை மரக்கறி விலை உயர்வாக இருக்கும்

கொழும்பு, ஜுன் 09

இம்மாத இறுதி வரை மரக்கறி விலை உயர்வாக இருக்கும் என ஹெக்டர் கொப்பேக்கடுவ விவசாய மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மரக்கறிகளின் விலையேற்றம் காரணமாக, நுகர்வோர் மாற்று வழிகளில் ஈடுபடுவதுடன், கடந்த காலங்களில் சந்தையில் மரவள்ளிக்கிழங்கு மற்றும் பலாக்காய்களுக்கு அதிக கேள்வி காணப்பட்டது.

அந்த தேவையுடன் சந்தையில் ஒரு கிலோகிராம் மரவள்ளிக்கிழங்கு மற்றும் பலாக்காயின் விலை நேற்று 200 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், நுகர்வோர் அதிக சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

அண்மைய நாட்களாக கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் பலாக்காய்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக சந்தை தரவுகள் தெரிவித்தன.

இதுவரை போஞ்சி, கரட், வெண்டிக்காய், பீட்ரூட், கறிமிளகாய், பாகற்காய் போன்ற காய்கறிகளின் மொத்த விலை 250 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. (அ)

# கஜேந்திரகுமாரின் கைதுக்கு பிரிட்டன் எம்.பிகள் கண்டனம்

கொழும்பு, ஜுன் 09

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டமையை பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாக கண்டித்துள்ளனர்.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் சிபோன் மெக்டொனக் மற்றும் எலியட் கொல்பேர்ன் ஆகியோர் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பாரிய அட்டூழியங்கள், இனப்படுகொலைகளுக்கான நீதி மற்றும் இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து குரல் கொடுக்கும், தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை இந்த கைது உணர்த்துவதாக சிபோன் மெக்டொனாக் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்கைது செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிப்பதாக பிரித்தானியாவின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான எலியட் கொல்பேர்ன் தெரிவித்துள்ளார். (அ)

# மூன்று பிள்ளைகளின் தாயைக் கடத்திச் சென்று 6 மாதங்களாக சிறை வைத்த சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜுன் 09

மூன்று பிள்ளைகளின் தாயான 29 வயதான பெண்ணொருவரை கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்ததாக கூறப்படும் மீன் வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை, கம்புறுப்பிட்டிய, மஸ்தகமுல்ல பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

மீன் வியாபாரியின் அச்சுறுத்தலில் சுமார் 6 மாதங்களாக குறித்த வீட்டில் தங்கியிருந்த மூன்று பிள்ளைகளின் தாயை பொலிஸார் மீட்டதுடன், அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்து, பின்னர் அவரை வைத்திய பரிசோதனைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தான் அங்கிருந்து தப்பித்தால் தனது கணவன் மற்றும் பிள்ளைகளை கொன்று விடுவதாகவும், நிர்வாணக் காணொளிகளை எடுத்து இணையத்தில் வெளியிடுவேன் என்றும் சந்தேக நபர் தன்னை மிரட்டியதாகவும் அந்த பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

தலைமுடி கத்தரிக்கப்பட்டு தான் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளானதாகவும் அந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் தாய், பல தடவைகள் பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தபோதிலும் சாதகமான பதில்கள் கிடைத்திருக்கவில்லை.

இறுதியாக தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்தவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து இது குறித்த விசாரிக்கும் பொறுப்பு மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொறுப்பதிகாரி வருணி போகஹவத்த விடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்பிரகாரம், அவரும் அவரது குழுவினரும் மாத்தறை நீதவான் நீதிமன்றில் தேடுதல் உத்தரவைப் பெற்று, சந்தேகநபரின் வீட்டைச் சோதனையிட்ட போது, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அதன்போது, குறித்த பெண்ணை அச்சுறுத்தப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 5 மீன் வெட்டும் கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அவரது நிர்வாண காட்சிகள் பதிவாகியிருந்த கைபேசி மற்றும் மெமரி அட்டைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபர் இளம் சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் காணொளிகளும் குறித்த கைபேசியில் இருந்ததாக பொலிஸார் கூறினர்.

36 வயதுடைய சந்தேகநபர், மேற்படி மூன்று பிள்ளைகளின் தாயாரின் உறவினர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# 300 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடு வார இறுதியில் நீக்கம்!



கொழும்பு, ஜுன் 09

மேலும் 300 பொருட்களுக்கான இறக்குமதி தடை, இந்த வார இறுதியில் நீக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தற்போது, இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருட்களின் எண்ணிக்கை 1216 வரை குறைந்துள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த தீர்மானங்களால், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் அதேவேளை, அந்நிய செலாவணியை தக்க வைத்துக்கொள்ள புதிய வரி அறிமுகம், வட்டி வீதங்களை உயர்த்துதல் என்பவற்றுடன் இறக்குமதி கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இதன் விளைவாக 2022 ஏப்ரல் மாதத்தில் 24.9 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டு பணவனுப்பல், இவ்வருடத்தில் 45.4 மில்லியன் டொலராக அதிகரித்தது.

அத்துடன், பணவீக்கமும் 70 சதவீதத்திலிருந்து 25.5 சதவீதம் வரை குறைந்தது. ரூபாவின் பெறுமதியும் 20 சதவீதத்தினால் அதிகரித்தது. உத்தியோகபூர்வ ஒதுக்கம் 3 பில்லியன் வரை உயர்வடைந்தது.

இதன் பிரதிபலன்களை மக்கள் அனுபவித்து வரும் நிலையில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு, தமது உற்பத்தியை முன்னெடுக்க தேவையான மூலப்பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 09

இலங்கையின் உத்தியோக பூர்வ வெளிநாட்டு ஒதுக்கம் கடந்த மே மாதத்தில் 26.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, குறித்த மாதத்தில் வெளிநாட்டு ஒதுக்கம் 3.4 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

சீன மக்கள் வங்கியினால் 1.4 பில்லியன் டொலர் பரிமாற்றும் வசதியும் இந்த வெளிநாட்டு ஒதுக்கத்தில் அடங்குவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கம் 2.7 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அனுரகுமார உள்ளிட்ட 26 பேருக்கு தடையுத்தரவு!

கொழும்பு, ஜுன் 09

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடப்பட்டமைக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி நேற்று நடத்த திட்டமிட்ட ஆர்ப்பாட்ட பேரணிக்குத் தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வெலிக்கடை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, ஜயவர்தனபுர வீதி, கொட்டா வீதி மற்றும் சரண வீதி ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தேர்தல் செயலகத்திற்குள் பிரவேசிப்பதை தடை செய்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

# விளையாட்டுத்துறைசார் தேவைகளை யாழ்ப்பாணத்தில் தீர்த்து வையுங்கள்!

## அங்கஜன் எம்.பி. கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 09**

**யாழ்.மாவட்டத்தில் நிலவும் விளையாட்டுத்துறைசார் தேவைகளைத் தீர்த்து வைக்குமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில், தற்போது யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் சாதிக்கும் இளைஞர் யுவதிகள் தொடர்பாக எடுத்துரைத்த அங்கஜன் இராமநாதன், அவர்களுக்கான பயிற்சி வசதிகள், வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க விளையாட்டுத்துறை அமைச்சு கவனமெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# போராட்டகாரரர்கள் 5 பேர் குறித்து விசாரணை நடத்துமாறு உத்தரவு

கொழும்பு, ஜூன் 09

நீதிமன்றத்தை அவமதித்தனர் என குற்ற சுமத்தப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டத்தின் 5 செயற்பாட்டாளர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு நீதிமன்றம், குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

பௌத்த சமயம் மற்றும் பௌத்த கலாசாரதத்துக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமை அதற்கு உதவியமை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நடாஷா எதிரிசூரிய மற்றும் புரூனோ திவாகர ஆகியோர் சம்பந்தமாக ஊடகங்கள் மத்தியில் உரையாற்றி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டவர்கள் பற்றி இந்த விசாரணைகளை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விதர்ஷன கன்னங்கர, தரிந்து ஜயவர்தன, லக்மாலி ஹேமச்சந்திர, தரிந்து உடுவரகெதர, பிடோ பெர்னாண்டோ ஆகியோர் தொடர்பாக விசாரணை நடத்துமாறே நீதிமன்றம், குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

நடாஷா எதிரிசூரிய, புரூனோ திவாகர ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை சம்பந்தமாக இவர்கள் நீதிமன்றத்தில் அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(அ)

# இந்திய சுற்றுலாப் பயணிகளுடன் திருகோணமலைக்கு வந்த கப்பல்!




கொழும்பு, ஜூன் 09

இந்திய சுற்றுலா பயணிகள் 744 பேருடன் உலகம் முழுவதும் பயணம் செய்துவரும் பஹாமாஸ் அரசுக்கு சொந்தமான இம்ப்ரஸ் என்ற கப்பல் நேற்று காலை திருகோணமலை துறைமுகத்தில் உள்ள அஷ்ரப் துறையில் நிறுத்தப்பட்டது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து இலங்கை வந்திறங்கிய இந்த சுற்றுலாப் பயணிகள் தம்புள்ளை, சிகிரியா, திருகோணமலை போன்ற இடங்களுக்குச் சென்றனர்.

அதன் பின்னர், இந்தக் கப்பல் இந்தியாவின் சென்னை துறைமுகத்துக்குப் புறப்படும் என்று துறைமுக அதிகார சபையின் வதிவிட முகாமையாளர் சமன் பெரேரா தெரிவித்தார்.

(அ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்!

வவுனியா, ஜூன் 09

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் ஆரம்பித்து 2300 ஆவது நாளான நேற்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் உள்ள கொட்டகையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்த போராட்டக்காரர்கள்-

உணவு, மருந்து, சமையல் எரிவாயு, உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடனுடன், தமிழர்களின் நிலத்தில் இனப்படுகொலை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துகின்றது.




சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கு பின்னர், இலங்கை இராணுவமும் பௌத்த பிக்குகளும் சட்டவிரோதமாக தமிழர்களிடமிருந்து நிலங்களை அபகரித்து, பௌத்த சிங்களவர்கள் வசிக்காத தமிழர்களின் தாயகம் முழுவதும் மகா சங்க சிங்கள பௌத்த சின்னங்களைக் கட்டியுள்ளனர்.

குறித்த கடன் பண்டைய இந்து கோவில்களை அழிக்க பண பலத்தை வழங்கியதுடன், அழிக்கப்பட்ட கோவில்கள் சிங்கள இனவாத பௌத்த சின்னங்களால் மாற்றப்பட்டன.


இந்த பௌத்த சின்னம் தமிழர்களால் வெறுக்கப்படுகிறது, ஏனெனில் இந்த சின்னம் இன அழிப்பு மற்றும் தமிழ் தாயகத்தில் தெற்கிலிருந்து சிங்களவர்களின் குடியேற்றத்தை குறிக்கிறது.

தமிழர்களின் தாயகத்தில் இலங்கை இராணுவத்தின் பிரசன்னம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனினால் மேலும் ஊக்குவிக்கப்பட்டதுடன், தமிழ் இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள்களை ஊக்குவித்து, எதிர்கால தமிழ்ச் சந்ததியை அழிக்கின்றது-என்றனர்.

(அ)

# டயனா கமகேயை விரட்டிவிட்டோம்!

## சஜித் கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 09

"தான் இன்னமும் ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளராக இருப்பதாக டயனா கமகே எம்.பி. கூறியுள்ளார். இது முற்றிலும் தவறான தகவலாகும்" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலார் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் பதவியில் இருந்து டயனா கமகே நீக்கப்பட்டுள்ளார். அதற்கான கடிதம் உள்ளது. நாம் போலி ஆவணத்தைச் சமர்ப்பிக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் சி.ஐ.டி.யினர் விசாரணை நடத்தலாம்.

எனவே, போலித் தகவல்களை வெளியிட வேண்டாம் என டயனா கமகேவிடம் கேட்டுக் கொள்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் புண்ணியத்தால்தான் அவர் நாடாளுமன்றம் வந்தார்."

-என்றார்.(அ)

# முதியவரின் சடலம் அல்வாயில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 09

அல்வாய் வடமத்தி, அல்வாய் மாவிலங்கடி வீயியில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் புதன்கிழமை முற்பகல் மீட்க்ப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வேதார்வளவு, வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுராமலிங்கம் (வயது- 81) என்பவராவார்.

மேற்படி வயோதிபர் மாவிலங்கடி வீதியில் அதிகாலை 12.30 மணியளவில் விழுந்து கிடந்ததைக் கண்ட இளைஞர் ஒருவர் அவரை எழுப்ப முற்பட்ட சமயம் அவர் அசைவற்று காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றனர்.




முற்பகல் சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# கிரேட் அட்ராக்டர்: சூரியன்களை விழுங்கும் பிரபஞ்சத்தின் புரியாத புதிர்

சூரியக் குடும்பத்தின் மாதிரி படத்தை வரையச் சொல்லி பள்ளி மாணவர்களுக்கு வீட்டுப் பாடம் அளிக்கப்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகின்றனர் வானியல் ஆய்வாளர்கள்.

சூரியக் குடும்பத்தில் உள்ள பூமி உள்ளிட்ட கோள்கள், சூரியனை மையமாக கொண்டு சுற்றி வருகின்றன என்பது நாம் அறிந்ததே. இதேபோன்று, சூரியன் நிலையாக இருப்பதாகவும், பூமி உள்ளிட்ட பிற கோள்கள் தான் அதனை சுற்றி வருகின்றன என்றும் நமக்கு கற்பிக்கப்பட்டது.

எனினும், சூரியக் குடும்பம் அமைந்துள்ள பால்வெளி மண்டலம், விண்மீன் மண்டலத்தில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான விண்மீன் திரள்கள் உள்ளிட்டவை பரந்து விரிந்த இந்த பிரபஞ்சத்தின் வழியாக வினாடிக்கு 600 கிலோமீட்டர் வேகத்தில் பயணித்து வருகின்றன என்கின்றனர் வானியலாளர்கள். பல ஆண்டுகளாக தொடரும் இந்த பயணத்திற்கு ஓர் இலக்கு உண்டு என்றும் அறியப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த பிரபஞ்சத்தில் பெரும் சக்தியின் இருப்பை 1970 களில் வானவியலாளர்கள் குழுவின் கண்டுபிடிப்புகள் தீர்மானித்தன. இந்த சக்திக்கான மூலத்தை நோக்கி, விண்வெளி மண்டலத்தின் பயணம் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இந்த சக்தியே கிரேட் அட்ராக்ட்டர் (**Great Attractor**) என்று அழைக்கப்படுகிறது.

நம்மால் தெளிவாக காண இயலாத ஒன்றின் திசையில் விண்மீன் திரள்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றன. பல மில்லியன் ஆண்டுகால அண்ட பரிணாம வளர்ச்சியின் விளைபொருளான கிரேட்டர் அட்ராக்ட்டர் தான் இந்த இயக்கத்தின் மையப் புள்ளி என்று பிபிசி முண்டோவிடம் விளக்குகிறார் நியூயார்க்கின் ஸ்டோனி புரூக்ஸ் பல்கலைக்கழகத்தின் வானியற்பியல் துறை பேராசிரியரும், அண்டவியல் நிபுணருமான பால் சுட்டர்.

ஈர்க்கக்கூடிய வேகத்தில் பயணிக்கும் திறனை விண்மீன்கள் பெற்றிருந்தாலும், கிரேட் அட்ராக்ட்டரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை நோக்கிய இவற்றின் பயணம் தோல்வி அடையக்கூடும் என்று கணிக்கப்படுகிறது.



கண்ணுக்கு தெளிவாக புலப்படாத இருண்ட ஆற்றலின் (**dark energy**) முடுக்க விசை, சில பில்லியன் ஆண்டுகளில் இந்த பிரபஞ்சத்தை அழிக்கலாம் என்பதால், விண்மீன் திரள்கள் உள்ளிட்டவை தங்களது இலக்கை ஒருபோதும் அடையாது என்கிறார் பால் சுட்டர்.

நாசா விளக்குவது போல, இருண்ட ஆற்றல் என்பது பிரபஞ்சத்தை ஊடுருவி அதன் விரிவாக்கத்தை துரிதப்படுத்தும் ஓர் மர்ம சக்தியாகும்.

இந்த சக்தியானது விண்மீன் திரள்களுக்குள் ஊடுருவி, தற்போது நாம் அறிந்திருக்கும் பிரபஞ்சத்தின் கட்டமைப்பு அழியும்வரை பரவக்கூடும்.

எனவே, கிரேட் அட்ராக்ட்டரின் விளைவுகளை புரிந்து கொள்வது, பிரபஞ்சத்தின் கட்டமைப்பை அறியும் முயற்சியுடன் தொடர்புடையது.

இருண்ட பொருளான கிரேட்டர் அட்ராக்ட்டர் விண்மீன் திரள்களை ஈர்ப்பத்துடன், பிரபஞ்சத்தை ஒருங்கிணைத்து வைத்திருக்க உதவுகிறது. ஆனால், இதற்கு மாறாக, இருண்ட ஆற்றல் பிரபஞ்சத்தை விரிவுபடுத்துகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

பிரபஞ்சத்தை பற்றிய ஆய்வில், அது எப்படி ஓர் ஒழுங்கமைப்புடனும், பல்வேறு பரிணாமங்களுடனும்



ஏன் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவது மிகவும் முக்கியமானது என்று பிபிசி முண்டோவிடம் விளக்குகிறார் பொகோட்டா கோளரங்கத்தில் பணியாற்றும் கொலம்பிய வானியற்பியல் அறிஞரான கார்லோஸ் அகஸ்டோ மோலினா.

### கிரேட் அட்ராக்ட்டர்' கண்டுபிடிக்கப்பட்டது எப்படி?

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'ஹப்பிள்' தொலைநோக்கி விண்வெளியில் நிறுவப்பட்டதன் பயனாக விண்வெளி ஆய்வுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த தொலைநோக்கியின் மூலம் விண்வெளியில் தாங்கள் காணும் எல்லாவற்றையும் எப்படியாவது ஒழுங்குப்படுத்த வேண்டும் என்று பெரிய சவாலை வானியல் ஆய்வாளர்கள் எதிர்கொண்டனர்.

வானியல் ஆராய்ச்சிகளின் பயனாக, நமது சூரியக் குடும்பம் மற்றும் விண்மீன் மண்டலத்தின் இயக்கம் ஆகியவை குறித்து 1970 களில் விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கினர். அத்துடன் இவற்றின் இயக்கம் அருகில் உள்ள விண்மீன் திரள்களின் இயக்கத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அதில், இவை அனைத்தும் பிரபஞ்சத்தின் விரிவாக்கத்தில் ஒரே திசையில் செல்வதாக தோன்றியது என்கிறார் சுட்டர்.

இருப்பினும் சூரியக் குடும்பம், விண்மீன்கள் மண்டலம் உள்ளிட்டவற்றின் இயக்கத்திற்கு கூடுதலாக ஒரு தெளிவற்ற திசையமைப்பு இருக்கலாம் என்ற முக்கியமான அம்சத்தையும் வானியல் ஆய்வாளர்கள் கவனிக்க தொடங்கினர்.

தொலைநோக்கிகளின் தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்ததன் பயனாக, உண்மையில் அனைத்து விண்மீன் திரள்களின் பயண திசை பொதுவானது என்பதை 1986இல் விஞ்ஞானிகளால் தீர்மானிக்க முடிந்தது.

இந்த ஆராய்ச்சிகளின் தொடர்ச்சியாக, கிரேட் அட்ராக்ட்டர் என்பது உண்மையில் என்ன என்று வானியல் ஆய்வாளர்கள் கண்டறிய முயன்றனர். ஆனால் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை.

ஆனாலும் இதுகுறித்த முக்கிய கோட்பாடு ஒன்று உள்ளது. அதன்படி, 'லானிகேயா' எனப்படும் விண்மீன் திரள்களின் பெரும் கூட்டத்துக்குள் அமைந்துள்ள இருண்ட கட்டமைப்பே 'கிரேட் அட்ராக்ட்டர்' என்று கருதப்படுகிறது. இது 300 மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு மேல் அல்லது அதற்கு குறைவான தொலைவில் விண்மீன் திரள்களை இழுக்கும் திறனை கொண்டுள்ளதாக விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

விண்மீன் திரள்களை இழுக்கும் திறன் படைத்த கிரேட் அட்ராக்ட்டர், பூமியில் இருந்து சுமார் 200 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

பிரபஞ்சத்தின் புதிரான கூறுகளில் ஒன்றாக இருக்கும் இந்த இருண்ட கட்டமைப்பு கவனிக்க முடியாத காரணியாக உள்ளது. பிரபஞ்சத்தின் மீது செலுத்தும் ஈர்ப்பு காரணியாக கிரேட் அட்ராக்ட்டர் இருக்கிறது.

வானியல் தொடர்பான ஆய்வுகள் மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டிருந்தாலும், கிரேட் அட்ராக்ட்டர் என்றால் உண்மையில் என்ன என்பது குறித்த மர்மம் நீடித்து கொண்டே தான் இருக்கிறது. இதுவே இதுகுறித்து கூடுதலாக ஆராய வேண்டும் என்ற தூண்டுதலை பால் சுட்டருக்கு ஏற்படுத்தியது.

கிரேட் அட்ராக்ட்டரின் அமைவிடம், ஆய்வாளர்கள் இதுதொடர்பாக கூடுதலாக அறிய முடியாமல் செய்கிறது. இது நமது விண்மீன் மண்டலத்திற்கு முற்றிலும் எதிர்புறத்தில் அசௌரிகமான இடத்தில் அமைந்துள்ளது என்று சுட்டர் சுட்டிக்காட்டுகிறார்.

பிரபஞ்சத்தில் இயங்கும் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள், கோள்கள் உள்ளிட்டவை இந்த சக்தி குறித்து



முழுமையாக பகுப்பாய்வு செய்ய அனுமதிக்கவில்லை என்கிறார் சுட்டர். நட்சத்திரங்கள், கோள்கள் உள்ளிட்டவற்றின் இயக்கங்களால் எழும் சத்தம், கிரேட் அட்ராக்ட்டர் மீதான கவனத்தை சிதைக்கின்றன என்கிறார் அவர்.

### இது கருந்துளை அல்ல

கிரேட் அட்ராக்ட்டர் கருந்துளை அல்ல என்று தெளிவாகக் கூறும் சுட்டர் மற்றும் மோலினா, இது முற்றிலும் வேறுபட்ட சக்தி. பிரபஞ்சத்தில் உள்ள கருந்துளைகளுக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்கின்றனர் அவர்கள்.

சூரியனில் ஹைட்ரஜன் வாயு ஹீலியமாக மாறும் செயல் தொடர்ந்து நடைபெற்று கொண்டே இருக்கும். இதன் விளைவாக சூரியனின் மையப் பகுதியில் அதிக ஈர்ப்பு விசை ஏற்படும். இந்த செயல் நிகழாமல் போகும் போது கருந்துளை என்ற ஒன்று உருவாகும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இவ்வாறு தீர்மானிப்பதன் மூலம் விண்மீன்களை இழுக்கும் தன்மை கொண்ட வழக்கத்துக்கு மாறான சக்திகள், பிரபஞ்சத்தின் பிற பகுதிகளும் இருந்தன என்பதை ஆய்வாளர்களால் நிறுவ முடிந்தது.

இதனைப் பற்றி அறிவது, பிரபஞ்சத்தைப் பற்றிய புரிதலுக்கான அடிப்படை பணிகளில் ஆய்வாளர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது என்று கூறும் மோலினா, கிரேட் அட்ராக்ட்டர் போன்ற கட்டமைப்புகள் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பற்றி அறியவும், ஈர்ப்புத் திறனுக்கேற்ப இவற்றை வகைப்படுத்தவோ, தரவரிசைப்படுத்தவோ இயலும் என்கிறார் அவர்.

கிரேட் அட்ராக்ட்டர் போன்ற பெரும் சக்திகள் ஒளி, ஈர்ப்பு உள்ளிட்ட பிற சக்திகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பது குறித்து கூடுதலாக அறிவதன் மூலம், இந்த பிரபஞ்சத்தின் கட்டமைப்பை வகைப்படுத்த இயலும் என்கிறார் மோலினா.

இந்த கட்டமைப்புகளை பற்றி அறிந்து கொள்வதன் மூலம் விண்வெளி சூழலின் எதிர்காலத்தைப் பற்றி அறிஞர்களால் ஆராய இயலும் என்பதும் இதில் மற்றொரு முக்கியமான அம்சம்.

விண்மீன்கள் எவ்வளவு வேகத்தில் நகர்கின்றன மற்றும் அவை எங்கு செல்கின்றன என்பதை பற்றியெல்லாம்



அறிவது எதிர்காலத்தில் இவை எவ்வாறு செயல்படும் என்பது குறித்து ஆராய்வதற்கு உதவும் என்கிறார் சுட்டர்.

விண்மீன் திரள்களின் பயணம் குறித்த ஆய்வுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் மூலம், இந்த பயணத்தின் போக்கை விஞ்ஞானிகள் அறிந்திருக்கிறார்கள்.

பிரபஞ்சத்தில் மற்றொரு சக்தி வாய்ந்த ஆற்றல் இருப்பதாக கூறும் சுட்டர், அது இருண்ட ஆற்றல் (**Dark Energy**) என்று அழைக்கப்படுவதாக கூறுகிறார். ஈர்ப்பு விசைக்கு முற்றிலும் எதிரான இந்த ஆற்றல், பொருட்களை தன்பால் இழுப்பதற்கு பதிலாக அவற்றை தள்ளும் என்கிறார் அவர்.

இதன் காரணமாக, இன்னும் சில மில்லியன் ஒளி ஆண்டுகளில் பால்வெளி மண்டலத்தில் உள்ள கோள்கள், விண்மீன் திரள்கள் உள்ளிட்டவை உண்மையில் கிரேட் அட்ராக்ட்டரை நெருங்கும். அப்போது நாம் மிகக் குறைவாக அறிந்திருக்கும் இருண்ட ஆற்றல், கிரேட் அட்ராக்ட்டரை நோக்கிய விண்மீன்களின் பயணத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். அதன் விளைவாக இந்த பிரபஞ்சத்தில் ஏற்கெனவே உள்ள அனைத்தும் அழிய அதிக வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

# இலங்கையில் எம்.ஜி.ஆர் பிறந்த வீடு இன்று எப்படி இருக்கிறது?

- ரஞ்சன் அருண் பிரசாத்

தென்னிந்திய திரைத்துறையில் என்றுமே அசைக்க முடியாத நட்சத்திரமாக பிரகாசித்தவர், தமிழக அரசியலில் எவராலும் மறக்க முடியாத "புரட்சி தலைவராக" விளங்கும் எம்.ஜி.ஆர் என அன்பாக அழைக்கப்படும் எம்.ஜி.ராமசந்திரன் இலங்கையிலேயே பிறந்தார்.

இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதியின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள நாவலபிட்டி என்ற பிரதேசத்திலேயே, 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் தேதி எம்.ஜி.ஆர் பிறந்தார்.

நாவலபிட்டி நகரிலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள கிராமமே கல்லாறு (இன்று கல்லோய என சிங்கள பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றது).

தேயிலை தொழிலைச் செய்யும் மக்களுக்காக ஆங்கிலேயர்களால் கல்லாறு பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட லயின் அறையொன்றிலேயே அவர் பிறந்துள்ளார்.

குழந்தைப்பருவத்தை எம்.ஜி.ஆர் நாவலபிட்டி பகுதியில் செலவிட்டதுடன், அதன் பின்னரான காலத்தில் கண்டி நகரில் வாழ்ந்துள்ளார்.

எம்.ஜி.ஆர் கல்லாறு பகுதியில் பிறந்தார் என்பதற்கு அவர் பிறந்ததாகக் கூறப்படும் வீடே தற்போது சாட்சியாக விளங்குகின்றது.



தமது முன்னோர்களின் தகவலை அடிப்படையாக் கொண்டே, எம்.ஜி.ஆர் இந்தப் பகுதியில் வாழ்ந்ததை அந்தப் பிரதேச மக்கள் உறுதி செய்கின்றனர்.

தனது தந்தையின் இறப்பு, அதைத் தொடர்ந்து, தனது சகோதரன் மற்றும் சகோதரி ஆகியோரின் இறப்புக்கள், எம்.ஜி.ஆர் மீண்டும் தமிழகம் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

எம்.ஜி.ஆர் பிறந்ததாகக் கூறப்படும் வீட்டைத் தேடி, நாவலபிட்டி பகுதியை நோக்கிப் பயணித்தோம்.

நாவலபிட்டி பகுதியிலிருந்து தலவாகலை செல்லும் பிரதான வீதியில் சுமார் 5 கிமீ தூரம் வரை பயணித்த போது, ஓர் இந்து ஆலயம் மற்றும் பாலமொன்றுடன் அமைந்துள்ள கல்லாறு பகுதியை நாம் சென்றடைந்தோம்.

பிரதான வீதியிலேயே சுமார் 200 வருடங்கள் பழைமையான லயின் அறைகள் அமைக்கப்பட்டிருந்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது.

அந்த லயின் அறைகளில் இறுதியாக உள்ள வீடே, எம்.ஜி.ஆர் பிறந்த வீடாக நம்பப்படுகின்றது. வீட்டிற்கு அருகில் மிகவும் பழைமையான பலா மரமொன்றும், வீட்டின் பின்புறம் நீரோடை ஒன்றும் காணப்படுகின்றது.

வீட்டின் முன்புறம் திருத்தி அமைக்கப்பட்டிருந்தாலும், வீட்டின் பின்புறம் அந்த வீடுகளின் பழைமையைக் கூறும் வகையில் உள்ளன.

வீட்டின் பின்புறத்தில் ஓடும் நீரோடையில், மழைக் காலத்தில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால், அந்த வீட்டின் பின்புறம் முழுமையாகத் தாழிறங்கியுள்ளதைக் காண முடிந்தது. மிகவும் சிதைவடைந்து காணப்படும் இந்த வீட்டில் தற்போது முதியவர் ஒருவர் வாழ்ந்து வருகின்றார்.

தமிழக அரசியலில் இன்றளவும் தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கும் எம்.ஜி.ஆர் பிறந்த வீடு மற்றும் அவர் பிறந்த ஊர் இன்றும் எந்தவித அபிவிருத்திகளும் இன்றிக் காணப்படுகின்றன.

எம்ஜிஆர் சிறு வயதில் வணங்கிய ஆலயம் புனரமைக்கப்பட்டு வருவதைக் காண முடிந்தது.

அதேபோன்று, எம்.ஜி.ஆர் விளையாடியதாகக் கூறப்படும் மைதானத்தில், இன்று சிறுவர் இல்லமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறுவர் இல்ல வளாகத்தில் அந்தப் பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கு மேலதிக நேர வகுப்புகள் எடுக்கப்படுவதுடன், விளையாடுவதற்காகவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.



அதேபோன்று, எம்.ஜி.ஆர் பிறந்ததாகக் கூறப்படும் கல்லாறு பகுதியிலுள்ள சில வீடுகளில் எம்ஜிஆரின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

எம்ஜிஆர் தொடர்பில் அந்த ஊரில் பிறந்த ரட்ணசபாபதி, எம்மோடு பேசினார்.

"எம்.ஜி.ஆர் இங்கு பிறந்தார் என்பது பெரிய விடயம். இந்த மண்ணிற்குப் பெருமை. அவர் இங்கிருந்து கண்டிக்கு போய், கண்டியிலிருந்து இந்தியாவிற்கு போன பிறகு, அந்த நாட்டிற்குப் போனதால்தான் பெரிய புகழைப் பெற்றார்.

இங்கிருந்திருந்தால்கூட அந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. எம்ஜிஆர் பிறந்ததைப் பற்றி சொல்லப் போனால், அவரின் நிறைய படங்களைப் பார்த்திருக்கின்றோம்.

அவருடைய அனுபவங்கள், அவர் இருந்த காலகட்டத்தில் என்னென்ன செய்தார் என்பதை பாடல்கள், படங்கள் மூலமாக அறிந்திருக்கின்றோம். அவர் ஒரு சகாப்தம் என்று சொல்லலாம். அவர் கல்லாறு பகுதியில் பிறந்தார் என்பது எங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது," என அவர் கூறுகின்றார்.

எம்ஜிஆர் வாழ்ந்த வீடு, அன்று எப்படி இருந்ததோ, அதே போன்றுதான் இன்றும் இருக்கின்றது என ரட்ணசபாபதி கவலை தெரிவித்தார்.

"அவர் வாழ்ந்த இந்த வீடு, அன்றைக்கு எப்படி இருந்ததோ, அந்தப் பழைமையைப் பராமரிக்கக்கூடிய அளவில் யாரும் இல்லை. இந்த லயின்கள் இடிந்து, உடைந்து மிக மோசமாக இருக்கின்றன.

அவர் ஞாபகமாக கட்டிக்கொடுப்பதற்குக்கூட யாரும் இல்லை. அவரின் பெயரை வைத்து இந்த ஊருக்கு எதாவது செய்யுங்கள். அவருக்காக நன்கொடை கொடுப்பவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள்.

கல்லோயா பிரிவை, எம்.ஜி.ஆர் காலனி எனப் பெயரை வைப்பதற்குக்கூட நாங்கள் தயார் நிலையில் இருக்கின்றோம். அவரது உருவச் சிலையை அமைப்பதாகச் சொன்னார்கள். அதோடு சேர்ந்து, மக்களின் வீடுகளைப் பராமரித்து, சரியான நிலையில் செய்துகொடுப்பார்கள் என்றால் பெரிய ஒரு உதவியாக இருக்கும்," என அவர் கேட்டுக்கொள்கின்றார்.

லயின் அறைகளிலேயே எம்ஜிஆர் வசித்த வீடு மிகவும் மோசமாக இருக்கின்றது என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.



சத்திவேல் பிள்ளை ஜோதிமதி மகாதேவ

"இந்த வீடுகள் 200 வருடங்கள் பழைமையானவை. வீடுகளின் பின்னால் அடியில் ஊற்றுகள் உள்ளன. காலம் செல்லச் செல்ல மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர் ரின் வீடு அதைவிட மோசமாக உள்ளது.

அந்த வீட்டிற்கு அருகில் ஆறொன்று வருகின்றது. மழைக் காலத்தில் சரியாக தண்ணீர் வருகின்றது. வெள்ள நீர் வருகின்றமையினால், அந்த வீடுதான் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றது.

நீர் அந்தக் கட்டடங்களில் பாய்வதால், சரிவுகள் ஏற்படுகின்றன. எம்ஜிஆர் இருந்த வீட்டில், அவர் மூலமாக ஏதாவது நடந்தால் மகிழ்ச்சி. அதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்," என அவர் கூறுகின்றார்.

இலங்கையில் எம்ஜிஆர் கண்டி நகரிலுள்ள வீடொன்றில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்ற போதிலும், அது உறுதி இல்லை என அந்த வீட்டின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி நகரிலுள்ள இந்த வீடானது, இலங்கையிலேயே மிகவும் பழைமையான வீடு எனக் கூறப்படுகின்றது. அது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டை நாச்சியப்ப செட்டியார் என்பவரால் கட்டப்பட்ட வீடு என வரலாறு கூறுகின்றது. அவரது பரம்பரையினர் தொடர்ந்து 6வது பரம்பரையாக இந்த வீட்டில் வாழ்ந்து வருகின்றார்கள்.

கண்டி நகரில் இரண்டு மாடிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட முதலாவது வீடு இதுவென சில தரப்பினர் கூறி வருகின்றார்கள்.

மிக பிரமாண்டமான சுவர்கள், பர்மா தேக்கில் அமைக்கப்பட்ட தளபாடங்கள் என மிகப் பெறுமதி வாய்ந்த வீடாக இந்த வீடு அமைந்துள்ளது.

இந்த வீட்டில்தான் எம்ஜிஆர் சிறிது காலம் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது.

எம்ஜிஆர் இந்த வீட்டில் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும் தமது முன்னோர்கள்கூட தம்மிடம் அது தொடர்பில் கூறவில்லை எனக் குறிப்பிடுகின்றார் அந்த வீட்டின் உரிமையாளர் சத்திவேல் பிள்ளை ஜோதிமதி மகாதேவ.




"வெளியில் உள்ளவர்கள் அவ்வாறு சொல்கின்றார்கள். வந்து வீட்டைப் பார்த்து விட்டுப் போறார்கள். ஆனால், அவர் இருந்தார் என்பதற்கு எங்களிடம் எந்தவோர் அத்தாட்சியும் இல்லை.

இங்கிருந்துதான் பள்ளிக்குச் சென்றார் என வெளியிலிருந்து வருபவர்கள் சொல்கின்றார்கள். நிறைய பேர் பார்ப்பதற்கு வருகின்றார்கள். அவருடைய ரசிகர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள்.

இந்தியாவிலிருந்தும் வருவார்கள். கேரளாவிலிருந்து வந்த அவருடைய உறவுக்காரர்கள், இரண்டு செங்கல்களைக்கூட அடிக்கல் நாட்டுவதற்காக வாங்கிக் கொண்டு போனார்கள்.

நிறைய பெண்கள், இந்த வீட்டு மண்ணை தொட்டுக் கும்பிட்டு, முத்தம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். காரணம் என்னவென்றால், எம்ஜிஆர் தான் எங்களுக்கு தாலி செய்துகொடுத்தார் என்று சொல்கிறார்கள்.

நிறைய கண்ணீர் விட்டு விட்டுப் போகிறார்கள். அவர் நடந்த இடத்தில் நாங்கள் இருந்து விட்டுப் போகிறோம் என்று இருந்து விட்டுப் போகிறார்கள். ஆனால், அவர் இருந்தார் என்பது எங்களுக்குத் தெரியாது. இது வெளியில் உள்ளவர்கள் சொல்வதுதான்," என சத்திவேல் பிள்ளை ஜோதிமதி மகாதேவ தெரிவிக்கின்றார்.

### இலங்கையில் எம்ஜிஆருக்கு நினைவிடம்

இலங்கையில் எம்ஜிஆருக்கு நினைவிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் உயர்மட்ட குழு, எம்ஜிஆர் பிறந்த வாழ்ந்ததாகக் கூறப்படும் இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இதன்போது, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தால் நினைவிடம் அமைக்க தீர்மானிக்கப்பட்டதாகப் பெருந்தோட்ட மனிதவள நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அத்துடன், எம்ஜிஆரின் பெயரில் வீட்டுத் திட்டம், மணி மண்டபம் உள்ளிட்ட திட்டங்களும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

# கஜேந்திரகுமார் மீது காட்டிய அக்கறையை டயானா கமகே மீது ஏன் காட்டவில்லை?

## நளின் பெர்னாண்டோ கேள்வி

கொழும்பு, ஜூன் 09

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்ய காட்டிய அவசரத்தை ஏன் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே விவகாரத்தில் காண்பிக்கவில்லை.

பிரித்தானிய பிரஜையான டயானா கமகேவை பாராளுமன்றம் பாதுகாத்தால் நாட்டு மக்கள் பாராளுமன்றத்தையும் நாட்டின் சட்டத்தையும் கடுமையாக விமர்சிப்பார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நிதி,பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

அறவிடப்படும் வரியை அரசாங்கம் முறையாக பயன்படுத்த வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மக்களின் வரி பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது. மறுபுறம் அரச நிதி கொள்ளையடிக்கப்பட்டது. ஊழலை ஒழித்தால் மாத்திரமே நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும்.

ஊழலற்ற,வெளிப்படை தன்மையிலான அரச நிர்வாகத்தை முன்னெடுக்குமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ள நிலையில் ஊழலை ஒழிக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தும், ஊழலை ஒழிக்கும் என நம்பிக்கை கொள்ள முடியாது. ஊழல் ராஜபக்ஷர்களின் ஆதரவுடன் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் ஊழல் இல்லா தொழியும் என்று குறிப்பிட முடியாது.

இந்த அரசாங்கம் மக்களாணைக்கு அச்சம் கொண்டுள்ளது. நிதி இல்லை அதனால் தேர்தலை நடத்த முடியாது என அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் தற்போது வெளிநாட்டு கையிருப்பு 300 கோடி டொலராக நிலைப்படுத்தப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. ஆகவே தேர்தல் வாக்கெடுப்புக்கு நிதி நெருக்கடி தற்போதும் வழக்கில் உள்ளதா ? என்பதை நீதிமன்றம் அரசாங்கத்திடம் வினவ வேண்டும்.

தேர்தல் தொடர்பில் ஊடக நிறுவனம் மேற்கொண்ட கருத்து கணிப்பில் நாட்டில் மொத்த சனதொகையில் 80 சதவீதமானோர் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளார்கள். பாக்கிஸ்தான் நாட்டில் தேர்தல் தொடர்பான வழக்குக்குக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 24 மணித்தியாலத்துக்குள் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் எமது நாட்டு நீதிமன்றத்தின் துரிதகர தன்மை கவலைக்குரியது.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவாக செயற்படுத்தப்படுகிறதா என்பதில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவின் இரட்டை குடியுரிமை விவகார வழக்கின் தீர்ப்பு தொடர்ந்து பிற்போடப்படுகிறது. முறைகேடான முறையில் கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டுள்ள விவகாரத்தில் டயானா கமகேவை கைது செய்ய முடியும் என கோட்டை நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் அவர் இதுவரை ஏன் கைது செய்யப்படவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்வதற்கு காட்டிய அக்கறை மற்றும் அவசரம் டயானா கமகே விவகாரத்தில் காண்பிக்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே 2004 ஆம் ஆண்டு முதல் பிரித்தானிய நாட்டு கடவுச்சீட்டை பாவிக்கிறார் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற இவரை எவ்வாறு பாராளுமன்றம் பாதுகாக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரதுங்கவுக்கு சட்டத்தை செயற்படுத்த முடியுமாயின் ஏன் டயனா கமகே விவகாரத்தில் சட்டத்தை செயற்படுத்த முடியாது.

இலங்கை பிரஜை இல்லாத, பிரித்தானிய பிரஜையை பாராளுமன்றம் பாதுகாப்பதை மக்கள் கடுமையாக விமர்சிப்பார்கள். அரசாங்கத்தின் அதிகாரத்தின் பயன்படுத்திக் கொண்டு சட்டத்தை தனக்கு ஏற்றாட் போல் பயன்படுத்துபவர்களுக்கு நிச்சயம் எதிர்காலத்தில் தண்டனை உண்டு -என்றார்.





# கதிர்வேலாயுத சுவாமி கோயில் தேர்த் திருவிழாவில் சஜித்

கொழும்பு, ஜூன் 09

கொழும்பு 13, கதிரேசன் வீதி - கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் இரதோற்சவ முத்தேர் பவனி திருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று காலை கலந்து கொண்டார்.

விசேட அபிஷேக அலங்காரப் பூஜைகளைத் தொடர்ந்து மங்கள வாத்தியம் முழங்க, பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் தேர் திருவிழா ஆரம்பமாகியது. பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் இந்தத் திருவிழாவில் கலந்துகொண்டனர்.






# கல்முனையில் இறைச்சிக்காக மாடு வெட்ட தற்காலிகத் தடை!

## மாநகர ஆணையாளர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 09

**நாட்டில் மாடுகளுக்கு ஒருவித தொற்று நோய் வேகமாக பரவி வருவதைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லையினுள் நேற்று வியாழக்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு இறைச்சிக்காக மாடு அறுப்பது தடை செய்யப்படுவதாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அறிவித்துள்ளார்.**

தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சில மாடுகள் கல்முனை பிராந்தியத்திலும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அது ஏனைய மாடுகளுக்கு விரைவாக பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதனாலும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சி மக்களின் நுகர்வுக்கு உகந்ததல்ல என்றும் மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி வழங்கிய அறிவுறுத்தலுக்கமைவாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபை எல்லையினுள் குறித்த காலப்பகுதியில் மாடு அறுத்தல், மாட்டிறைச்சியை விற்பனை செய்தல் மற்றும் மாட்டிறைச்சிறைச்சியை பொதி செய்தல் என்பன தற்காலிகமாக தடை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இத்தடை உத்தரவை மீறி செயற்படுகின்ற மாட்டிறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சம்மந்தப்பட்டவர்களுக்கு அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (அ)

# திருமலை பொது வைத்தியசாலைக்கு பால்மா பைக்கெற்றுகள் விநியோகம்



திருமலை, ஜூன் 09

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரசவத்துக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்களின் நலன் கருதி உதவும் கரங்கள் அமைப்பின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டு வரும் பால் தேநீருக்கான பால்மா பைக்கெற்றுகள் கடந்த 07ஆம் திகதி திருகோணமலை ஹற்றன் நஷனல் வங்கி பிரதான கிளை முகாமையாளர் ஜனாப் மக்பூல் ஹமீட்டினால் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ஜகத் விக்கிரமரத்ன விடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இதன்போது, உதவும் கரங்கள் அமைப்பின் ஆலோசகர் ஜவ்பர் ஹசன், அமைப்பாளர் ஏ.எஸ் ஜவாஹிர் மற்றும்வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மட்டு. விபத்தில் இருவர் படுகாயம்



மட்டக்களப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கட்டுநாயக்காவில் இருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் அதே திசையில் முன்னே சென்றுகொண்டிருந்த கார் ஒன்றின் மீது மோதியதனால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மட்டக்களப்பில் இருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கார் முற்றாகச் சேதமடைந்தது.

அதில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# பத்திரகாளி அம்பாளின் தீ மிதிப்பு மகோற்சவம்!

காரைதீவு, ஜூன் 09

காரைதீவு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகும்.

தொடர்ச்சியாக 10 நாட்கள் சடங்குகள் இடம்பெற்று 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை தீமிதிப்பு வைபவம் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையிலே சடங்கு நடைபெறும்.

பூசைகள் தினமும் பகல் 12.30 மணிக்கும் இரவு 7 மணிக்கும் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் மா.கணேசலிங்கம் தெரிவித்தார்.

16ஆம் திகதி காலை ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம் பெறும். 20ஆம் திகதி இரவு அம்மன் முத்துச்சப்ரத்திலே ஊர்வலம் வருகின்ற நிகழ்வு இடம்பெறும். 23ஆம் திகதி காலையில் மஞ்சள் குளித்து தீமிதிப்பு இடம்பெறும். பகல் அன்னதானம் இடம் பெறும் என செயலாளர் கணேசலிங்கம் மேலும் தெரிவித்தார். (அ)

# சாய்ந்தமருதில் நாளை குருதிக்கொடை முகாம்

அம்பாறை, ஜூன் 09

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக சாய்ந்தமருதில் "உதிரம் கொடுத்து உயிர்காப்போம்" எனும் தொனிப்பொருளில் யுஎஸ்எப் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 3 வரை சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

"எவரொருவர் ஒரு மனிதனை வாழ வைக்கின்றாரோ அவர் யாவரையும் வாழ வைத்தவர் ஆவார்" என்ற அல்குர்ஆன் வசனத்திற்கு ஏற்ப இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இதில் கலந்து கொண்டு இரத்தானங்களை வழங்க முன்வருமாறு ஏற்பாட்டு குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆண், பெண் இருபாலாருக்கும் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் வாகன வசதி இல்லாதவருக்கு வாகன வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூதூர் சுகாதார வைத்திய பிரிவில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு திட்டம்



திருமலை, ஜூன் 09

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நடுத்தீவில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு தனியார் வீடுகள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பொது இடங்கங்கள் போன்றவற்றில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூதூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவக உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மூதூர் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூக நிலைய பிரதிநிதிகள், சமுர்த்தி பயனாளிகள், பிரதேசவாசிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ)

# பிளாஸ்ரிக்கை தவிர்ப்பதற்கு கிராம மக்கள் உறுதிமொழி!

மட்டக்களப்பு, ஜூன் 09

பிளாஸ்ரிக் பொருட்களாலும் நெகிழிப் (பொலித்தீன்) பொருட்களாலும் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் மிகமோசமான பாதிப்புகளைத் தவிர்க்கும் முகமாக, அந்தப் பொருட்களைத் தமது அன்றாடப் பாவனையில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கு, பால்சேனை கிராம மக்கள் உறுதி பூண்டிருப்பதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

வாகரை, பால்சேனை கடற்கரையில் பிளாஸ்ரிக் உட்பட நெகழிகளையும் இன்னும் பிற உக்காத பொருட்களையும் திண்மக் கழிவுகளையும் அகற்றி, கடற்கரையைத் துப்புரவு செய்யும் சிரமதானப் பணி கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.



பால்சேனை, நாகபுரம் ஆகிய கிரமங்களின் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடற்கரையோர சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

'வீசபெக்ற்' நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு, இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்டமிடலில் வாகரைப் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்போடு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் இறுதியில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை அன்றாட வீட்டு உபயோகத்தில் இருந்து தவிர்ப்போம் எனும் உறுதிமொழியும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எம் இராணுவ திட்டங்களை அணை உடைப்பு நிறுத்தாது

## உக்ரைன் ஜனாதிபதி திட்டவட்டம்



கீவ், ஜூன் 09

**தெற்கு உக்ரைனில் உள்ள ககோவ்கா அணை இடிந்ததை பாரிய சுற்றுச்சூழல் அழிவு என உக்ரேனிய ஜனா திபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.**

இத்தகைய முக்கியமான உள்கட்டமைப்பு மீதான தாக்குதலால் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை தடுக்கும் செயற்பாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

அணையை அழித்த ரஷ்யாவின் செயற்பாடு வேண்டுமென்றே செய்த குழப்பமான செயல் என்றும் உக்ரேனியப் படைகளைத் தடுக்க வெள்ளத்தை ஒரு ஆயுதமாக ரஷ்யா பயன்படுத்துகின்றது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

எவ்வாறான நடவடிக்கைகளை ரஷ்யா முன்னெடுத்தலும் போருக்குப் பிந்தைய இழப்பீட்டுச் செலவுகளை மொஸ்கோ ஒரு நாள் உக்ரைனுக்கு செலுத்தவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# உக்ரைன் அணை மீது தாக்குதல் ஐ. நா. பொதுச்செயலர் கண்டனம்



நியூயோர்க், ஜூன் 09

உக்ரைனில் அணைக்கட்டு மீது ரஷ்யா நடத்திய தாக்குதலுக்கு ஐ.நா. கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

உக்ரைனின் மிக முக்கிய நதி டினிப்ரோ ஆற்றில் கட்டப்பட்ட ககோவ்கா அணை மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் உடைந்துபோன அணையில் இருந்து வேகமாக நீர் வெளியேறி வருகிறது.

அணை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் அன்ரனியோ குட்ரெஸ் கருத்து தெரிவித்தார்.

அதில், குறித்த தாக்குதல் மக்கள் மீதான போருக்கு கொடுக்கும் கொடூர விலைக்கு மற்றும் ஓர் உதாரணம். கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக பாதிக்கப்படுவோரின் அவலக்குரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. இது நிறுத்தப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு விடயம் மட்டும் தெளிவாக இருக்கிறது. இது உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய மிக பயங்கரமான தாக்குதல் ஆகும். குடிதண்ணீர், நீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் இதர உதவிகள் வழங்குவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனிதநேய தொண்டு அமைப்புகள் உக்ரைன் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சவூதி அரேபியாவில் மீண்டும் திறக்கப்பட்ட ஈரான் தூதரகம்

ரியாத், ஜூன் 09

சன்னி முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட சவூதி அரேபியாவில், ஷியா முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட ஈரான் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தனது தூதரகத்தை திறந்துள்ளது.

சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் நீண்டகாலமாக மதப்பிரிவுகள் என்ற அடிப்படையில் பகைமை நிலவி வருகின்றது.

இந்த நிலையில், ஈரானின் ஆதரவு பெற்ற யேமன் ஷியா பிரிவு ஹூதி போராளிகளுக்கு எதிராகவும் சன்னி பிரிவினரை அதிகமாக கொண்டுள்ள யேமன் அரச படைகளுக்கு ஆதரவாகவும் சவூதி அரேபியா தாக்குதல் நடத்தி வருகிறது.

சவூதியின் இந்த நடவடிக்கைகள் ஈரானுக்கு இடையிலான விரிசலை மேலும் அதிகரித்தது.

அதேவேளை சவூதியில் ஷியா பிரிவின் தலைவர் நிமர் அல் நிமர் தூக்கிலிடப்பட்டார்.



இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2016 ஆம் ஆண்டு ஈரானின் தெஹ்ரான் மற்றும் மாஷாத் நகரங்களில் இயங்கிய சவூதி தூதரகங்கள் தாக்கப்பட்டன.

இதனையடுத்து சவூதி, ஈரானுடனான தனது தூதரக உறவை முறித்துக்கொண்டதுடன் ஈரானும் சவூதி தூதரக அதிகாரிகளை நாட்டில் இருந்த வெளியேற்றியது.

இவ்வாறான நிலைமையில், சீனா மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இரண்டு நாடுகளும் தூதரக உறவுகளை புதுப்பிக்க இணங்கின.

இந்த நிலையில், ஈரான் தனது தூதரகத்தை சவூதி தலைநகர் ரியாத்தில் நேற்று முன் தினம் திறந்துள்ளது.

எனினும் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தனது தூதரகம் திறக்கப்படுவது குறித்து சவூதி உறுதியான தகவல்களை வெளியிடவில்லை. (அ)

# ஆப்கானிஸ்தானில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து!

## 25 பேர் உயிரிழப்பு!!

காபூல், ஜூன் 09

ஆப்கானிஸ்தான் நாட்டின் சர்-இ-பல் மாகாணத்தில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

சயத் மாவட்டத்தை சேர்ந்த 25 பேர் நேற்று முன் தினம் திருமண நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பஸ்ஸில் பயணித்துள்ளனர். திருமண நிகழ்வில் பங்கேற்றுவிட்டு பஸ் சயத் மாவட்டத்துக்கு புறப்பட்டுள்ளது.

குறித்த பஸ் மலைப்பாங்கான பகுதியில் வந்துகொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து திடீரென பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 9 குழந்தைகள், 12 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து சாரதியின் கவனக்குறைவு காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# பாப்பரசர் வைத்தியசாலையில்!



றோம், ஜூன் 09

புனித திருத்தந்தை பிரான்சிஸ் வயிற்று அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வத்திகான் தெரிவித்துள்ளது.

இவருக்கு பெருங்குடலில் காணப்பட்ட சிறிய பிரச்னை காரணமாக லேபரோடமி என்ற திறந்த வயிற்று அறுவைச் சிகிச்சை செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கடந்த சில நாட்களுக்கு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டியிருக்கும் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

86 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த மார்ச் மாதம் சுவாசக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மஞ்சள் நிற புகையில் மூழ்கியது நியூயோர்க்!

நியூயோர்க், ஜூன் 09

கனடா காட்டுத்தீ காரணமாக நியூயோர்க் நகர் முழுக்க மஞ்சள் நிற புகை மூட்டம் ஏற்பட்டுள்ளது.

காட்டுத்தீ காரணமாக அமெரிக்காவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மிக மோசமான காற்று மாசு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டுத் தீ காரணமாக கனடாவில் ஆயிரக்கணக்கானோர் தங்களது வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மஞ்சள் நிற புகைமூட்டம் மன்ஹற்றன் நகரின் வானுயர்ந்த கட்டடங்களை மூழ்கடிக்கச் செய்திருக்கின்றது.



இதன் காரணமாக காற்று மாசு ஏற்பட்டதோடு, விமானங்கள் காலதாமதமாக கிளம்பிச் சென்றன.

காட்டுத் தீ காரணமாக அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் இருந்து சிக்காக்கோவின் மேற்கு பகுதி மற்றும் தெற்கு அட்லாண்டா வரை பாதிப்பை ஏற்படுத்தியது.

கனடாவில் இந்த காட்டுத்தீ காரணமாக சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ட்ராவிஸ் ஹெட் சதம் ஆஸி. அபார தொடக்கம்!




லண்டன், ஜூன் 09

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக ட்ராவிஸ் ஹெட் அதிரடியாக விளையாடி சதம் விளாசினார். இதனால் அவுஸ்திரேலிய அணி ஓட்டங்களை குவித்துள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான ஐ. சி. சி. உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இந்திய அணி 4 வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு சுழல்பந்து வீச்சாளர் என்ற கலவையுடன் களமிறங்கியது. பிரதான சுழல்பந்து வீச்சாளராக ஜடேஜா இடம்பெற்றார். அஸ்வினுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. வேகப்பந்து வீச்சாளர்களாக முகமது ஷமி, முகமது சிராஜ், உமேஷ் யாதவ், ஷர்துல் தாகூர் ஆகியோர் இடம்பெற்றனர்.

துடுப்பெடுத்தாடத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. உஸ்மான் கவாஜா 10 பந்துகளை சந்தித்த நிலையில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் முகமது சிராஜ் பந்தில், விக்கெட் காப்பாளர் பரத்திடம் பிடிகொடுத்து வெளியேறினார். இதையடுத்து களமிறங்கிய மார்னஷ் லபுஷான் தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தி இணைப்பாட்டம் ஒன்றைக் கட்டமைக்க முயன்றார்.

சீராக ஓட்டங்களை சேர்த்த டேவிட் வோர்ணர் 60 பந்துகளில் 8 பௌண்ட்ரிகளுடன் 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷர்துல் தாகூர் பந்தில் பரத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்கு லபுஷானுடன் இணைந்து வோர்ணர் 70 ஓட்டங்கள் சேர்த்தார்.

மதிய உணவு இடைவேளையில் அவுஸ்திரேலிய அணி 23 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 73 ஓட்டங்கள் எடுத்தது. லபுஷான் 26, ஸ்ரீவ் ஸ்மித் 2 ஓட்டங்களுடன் உணவு இடைவேளைக்கு பின்னர் தொடர்ந்து விளையாடினார்கள்.

லபுஷான் 62 பந்துகளில், 3 பௌண்ட்ரிகளுடன் 26 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முகமது ஷமி பந்தில் 'போல்ட்' ஆனார். 76 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்த நிலையில் களமிறங்கிய டிராவிஸ் ஹெட் இந்திய பந்து வீச்சை கடும் சிதைவுக்கு உட்படுத்தினார். குறுகிய வடிவிலான ஆட்டம் போன்று அவர், துடுப்பு மட்டையை சுழற்றினார். 106 பந்துகளில், 14 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் தனது 6ஆவது சதத்தை விளாசினார் டிராவிஸ் ஹெட். மறுமுனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிய ஸ்ரீவ் ஸ்மித் 144 பந்துகளில் 7 பௌண்ட்ரிகளுடன் அரைச்சதம் கடந்தார். டெஸ்ட் போட்டிகளில் இது அவரின் 38வது அரை சதமாக அமைந்தது.

முதல் நாள் ஆட்டம் முடிவின் போது அவுஸ்திரேலியா 3 விக்கெட்கள் இழப்பிற்கு 327 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்ரீவ் ஸ்மித் 95 ஓட்டங்களுடனும், டிராவிஸ் ஹெட் 146 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)




## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கறுப்பு பட்டியுடன் வீரர்கள்!

லண்டன், ஜூன் 09

ஒடிசா ரயில் விபத்தில் உயிரழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணி வீரர்களுடன், அவுஸ்திரேலிய அணி வீரர்களும் கையில் கறுப்பு பட்டி அணிந்து விளையாடி வருகின்றனர்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, இந்தப் போட்டியில் இந்திய, அவுஸ்திரேலிய அணி வீரர்கள் கையில் கறுப்பு பட்டி அணிந்து விளையாடி வருகின்றனர். அவர்கள் மட்டுமல்லாமல், கள நடுவர்களும் கையில் கறுப்பு பட்டை அணிந்து தங்கள் இரங்கல்களை வெளிப்படுத்தியுள்ளனர். (ஐ)

## அஸ்வினை அணியில் சேர்க்காமல் இந்தியா தவறிழைத்துவிட்டது


லண்டன், ஜூன் 09

இந்தியா - அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுகின்றன. இந்நிலையில், இந்தப் போட்டியில் இந்திய அணியின் ஆடும் பதினொருவர் அணியில் பிரதான சுழல்பந்து வீச்சாளரான அஸ்வினுக்கு இடம் மறுக்கப்பட்டது. இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொண்டிங் கருத்து தெரிவித்துள்ளார்.

"என்னைப் பொறுத்தவரையில் இந்திய அணி இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸிற்கான அதிரடியான பந்துவீச்சை மட்டுமே கொண்டுள்ளது. இது மிகப்பெரிய தவறாகும். அவுஸ்திரேலிய அணியில் அதிகம் இடது கை துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ஜடேஜாவை காட்டிலும் அஸ்வின் அவர்களுக்கு இம்சை கொடுப்பார். ஆடுகளத்தில் புற்கள் உள்ளது. அதை நானும் பார்த்தேன். ஆனால், அதற்கு கீழ் பகுதி வறண்டு காணப்படுகிறது. அது எனக்கு தெளிவாக தெரிந்தது" - என்றார்.

அஸ்வின், இங்கிலாந்து கவுண்ட்டி கிரிக்கெட்டில் சர்ரே அணிக்காக விளையாடியுள்ளார். இந்த அணியின் சொந்த மைதானம் ஓவல்தான். அதே நேரத்தில் அஸ்வின் ஆடும் பதினொருவரில் இல்லாதது குறித்து பலரும் விமர்சித்து வருகின்றனர். (ஐ)




## இன்டர்மியாமி அணியில் இணைகின்றார் மெஸ்ஸி!

மட்ரிட், ஜூன் 09

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான மெஸ்ஸி, இன்டர் மியாமி உதைபந்தாட்ட கழக அணியில் இணைந்து செயல்பட உள்ளார் என்று அறிவித்துள்ளார். இது நூறு சதவீதம் உறுதி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாரிஸ் சென் ஜெர்மைன் (பி. எஸ். ஜி) உதைபந்தாட்ட கழக அணியில் இருந்து மெஸ்ஸி வெளியேறினார். அப்போது முதல் அடுத்ததாக அவர் இணைய உள்ள அணி எது என்ற எதிர்பார்ப்பு எகிறி இருந்தது. மீண்டும் தனது பழைய அணியான பார்சிலோனா அணியுடன் இணைவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அதனை அவரது தந்தை ஜோர்ஜ் மெஸ்ஸி, பார்சிலோனா அணி தலைவர் ஆகியோர் கிட்டத்தட்ட உறுதி செய்தனர்.

அதே நேரத்தில் சவுதி அரேபியாவின் அல்-ஹிலால் அணி மற்றும் அமெரிக்காவின் இன்டர் மியாமி கழக அணிகளும் அவரை ஒப்பந்தம் செய்ய முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த சூழலில் இன்டர் மியாமி அணியை தெரிவு செய்துள்ளார் மெஸ்ஸி.

"நான் இன்டர் மியாமி அணியில் இணைகிறேன். இந்த முடிவு 100 சதவீதம் உறுதி. பணம்தான் முக்கியம் என்றால் நான் சவுதி அரேபியாவின் கழகத்தில் இணைந்திருப்பேன். ஆனால், உண்மை என்னவென்றால் எனது எண்ணம் வேறானதாக உள்ளது. அது பணம் சார்ந்து அல்ல", என்று மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

வரும் 2026ஆம் ஆண்டு உதைபந்து உலகக் கிண்ணத் தொடர் அமெரிக்கா, மெக்சிக்கோ மற்றும் கனடாவில் நடைபெறவுள்ளது. இந்த சூழலில் 2022 உலகக் கிண்ணத்தை வென்ற மெஸ்ஸி, அமெரிக்க நாட்டில் கழக அணிக்காக விளையாடுவது உதைபந்தாட்டத்துக்கு புதிய பாய்ச்சலை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் ஸ்வியாரெக்!



பாரிஸ், ஜூன் 09

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார் போலந்தின் இகா ஸ்வியாரெக்.

கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ரென்னிஸ் போட்டி ஆண்டுதோறும் நடந்து வருகிறது.

பாரிஸில் நடக்கும் இந்தத் தொடரில் நேற்று நடந்த காலிறுதி சுற்று ஆட்டத்தில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக், அமெரிக்க வீராங்கனை கோகோ கபுடன் மோதினார்.

இதில் ஸ்வியாரெக் 6-4, 6-2 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். அரையிறுதியில் பிரேசில் வீராங்கனை பீட்ரிஸ் ஹாடட் மையாவை சந்திக்கிறார். (ஐ)

# கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த உலகத்தில்தான் வாழ்கிறாரா?

## பாராளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூன் 09

**கல்வியமைச்சர் இந்த உலகத்தில்தான் வாழ்கின்றாரா என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.**



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல கேள்வி நேரத்தில் இந்த சுவாரஷ்ய சம்பவம் நடந்தது.

கல்வியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்கள் மாகாணங்களுக்கு வெளியில் நியமிக்கப்படுவது தொடர்பில் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

அவர்களுக்கு வழங்கப்படும் 37,000 ரூபா சம்பளத்தில் வெளிமாகாணத்தில் தங்குவது, போக்குவரத்துச் செலவை ஈடு செய்வது சிரமம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த விளக்கமளித்தார்.

புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், உடனடியாக இதில் மாற்றம் ஏற்படுத்த வாய்ப்பில்லை என்று கூறினார்.

ஆரம்பகாலம் போல இப்போது சிரமங்கள் இல்லையென்றும், 5 மணித்தியாலங்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த சி.சிறிதரன், “கல்வி அமைச்சர் நல்ல மனிதன். ஆனால் அவர் இந்த உலகத்தில் வாழவில்லையென்பது தெரிகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு இப்போது ரயிலில் செல்ல முடியாது. யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் கட்டணம் 3200 ரூபா. இப்படியான நிலைமையில் எப்படி அவர்கள் வாழ்க்கை நடத்துவது” - என்றார். (அ)

# குரங்கு அம்மையினால் அச்சமடைய வேண்டாம்

கொழும்பு, ஜூன் 09

குரங்கு அம்மை தொற்று குறித்து பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லையென சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் தலைவர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் குரங்கு அம்மை தொற்றுடன் இருவர் அடையாளம் காணப்பட்டனர். இதனால், சமூகத்திற்கு அச்சுறுத்தல் இல்லையென மருத்துவர் சமித்த கினிகே கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நோய்த்தொற்றுகள் எதுவும் இலங்கையிலிருந்து தோன்றியவை அல்ல. எனவே மற்றவர்களுக்கு நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

பாதிக்கப்பட்ட நோயாளிகள் சமூகத்திற்கு வெளிப்படுவதைத் தடுக்க அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, மக்கள் பீதியடைய வேண்டாம்.- என்றார்.

இதேவேளை, தொற்று நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர்



தினேஷ் கொக்கலகே தெரிவிக்கையில்-

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோர், குரங்கு காய்ச்சலின் அறிகுறிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

குரங்கு அம்மை தொற்றினால் பாதிக்கப்பட்ட 5 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் டுபாயிலிருந்த வந்த பெண்ணும், குழந்தையும் அடையாளம் காணப்பட்டன.

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பெண்ணும், 15 நாளான பெண் சிசுவுமே அடையாளம் காணப்பட்டனர்.

டுபாயிலுள்ள கணவரின் மூலம், அந்த பெண் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார். (அ)

# தனியார் கல்வி நிலையங்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 09

தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரனின் தலைமையில் இன்று காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை குழுக் கலந்துரையாடல் ஒன்றை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகள் காணப்படுகின்றன.

எனவே அவை தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் ஆராய மேற்படி கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரம், கல்வித்துறை சார்ந்தோர், மதத் தலைவர்கள், பொலிஸார், தனியார் கல்வி நிலைய நிறுவனங்களின் உரிமையாளர்கள், பெற்றோர், மாணவர்கள் போன்றோர் கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# திருமணம் செய்வதாக ஆசை காட்டி மோசடி செய்த கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூன் 09

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஒரு இலட்சம் ரூபாவை மோசடி செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியாபொலிஸ் பிரிவில் கடமையாற்றும் திருமணமானவர் எனவும் பொலிஸார் கூறினர்.

2019 ஆம் ஆண்டு நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுடன் பொலிஸ் கான்ஸ்டபிளும் காதல் உறவில் ஈடுபட்டதாகவும், அவருக்கு திருமணம் செய்து வைப்பதாக உறுதிய ளித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர் பணத்தைப் பெற்றுக்கொண்டு கான்ஸ்டபிளை ஏமாற்றியதாக வவுனியா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கான்ஸ்டபிள் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# இயற்கை உரத் தொழிற்சாலை முல்லைத்தீவில் திறந்துவைப்பு!




முல்லைத்தீவு, ஜூன் 09

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உடையார்கட்டு மூங்கிலாறு வடக்கில் உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் இயற்கை உரத் தொழில்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யோகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கமலேஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமகாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான தேவந்தினி பாபு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இயற்கை உரத் தொழில் சாலையின் பெயர்ப் பலகையை அதிதிகள் திரைநீக்கம் செய்து, தொழிற்சாலையைத் திறந்து வைத்தனர்.

இதன்போது இயற்கை உரம் எவ்வாறு தயாரித்தல் என்பது தொடர்பாக அதிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன் பொதி செய்யப்பட்ட இயற்கை உரம் சம்பிரதாயபூர்வமாக அறிமுகம் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.(அ)

# வெளிவிவகார அமைச்சருக்குரிய சொகுசு பங்களா கோட்டாவுக்கு!

கொழும்பு, ஜூன் 09

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு, வெளிவிவகார அமைச்சருக்கு வழக்கமாக ஒதுக்கப்படும் ஸ்டான்மோர் கிரசென்ட்டில் அமைந்துள்ள புதிய சொகுசு பங்களாவொன்று அரசினால் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் சலுகைகளை நிர்வகிக்கும் சட்டத்துக்கு இணங்க அரசினால் அனுசரணையளிக்கப்பட்ட வீடொன்றைப் பெற கோட்டாபயவுக்கு உரிமையுண்டு. எவ்வாறாயினும், பொதுக் கிளர்ச்சிக்குப் பின்னர் கோட்டாபய தனது பதவிக் காலத்தின் மத்தியில் பதவியை விட்டு வெளியேறியதால், அவருக்கு அந்த சலுகைகளைப் பெறுவதில் தெளிவற்ற தன்மைகள் காணப்படுகின்றன.

கொழும்பு 7, ஸ்டான்மோர் கிரசென்ட்டில் அமைந்துள்ள இந்த சொகுசு வீடு, தற்போது பணியாற்றும் வெளியுறவு அமைச்சருக்கு ஒதுக்கப்படுவது வழக்கம். கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு இந்த வீட்டை ஒதுக்க வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஒப்புதல் அளித்ததாக தகவலறிந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த வீட்டில் முன்னர் மறைந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இருந்தார். இந்த வீடு கோட்டாபயவுக்கு ஒதுக்கப்படுவதற்கு முன்னர் விரிவான புனரமைப்புக்கு உள்ளாகியிருந்தது.

கடந்த ஆண்டு பதவியை துறந்த கோட்டாபயவுக்கு, மலலசேகர மாவத்தையில் ஒரு அரசு பங்களா ஒதுக்கப்பட்டது. அங்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட அந்த பங்களாவில் ‘மிகவும் சத்தமாக உள்ளது’ எனக் கூறி அவர், அந்த வீட்டைக் காலி செய்ததாகவும், அவருக்கு பாரியளவில் பாதுகாப்புப் பணியாளர்கள் இருந்தபோதிலும் அவர் தனது பாதுகாப்பு குறித்தும் பிரச்னைகளை எழுப்பியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் கோட்டாபய தனது மிரிஹான இல்லத்துக்குச் சென்றார். அங்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவர், புதிய பங்களாவைக் கோரினார்.

இந்த புதிய கோரிக்கை முன்னாள் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டதும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது ஒப்புதலை வழங்கியதாக அறியப்படுகின்றது. (அ)

# ஹிக்கடுவை கடலில் மூழ்கி ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 09

ஹிக்கடுவை கடற்பகுதியில் நீராடச் சென்ற ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று முன் தினம் நீரில் மூழ்கியதையடுத்து, உயிர்காப்புப் படையினரால் அவர் கரைக்கு கொண்டுவரப்பட்டு கராப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

29 வயதான குறித்த ரஷ்யப் பிரஜை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஹிக்கடுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## எனக்கு...

துள்ளார்.

வடமராட்சி கிழக்கு சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் அவரின் இல்லத்தில் வைத்து கஜேந்திரகுமார் எம். பி. கைது செய்யப்பட்டார். பின்னர், அன்று மாலையே கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதையடுத்து, நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் உரையாற்றினார்.

இதன்போது, "பாராளுமன்ற சிறப்புரிமையின் பிரகாரம், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) நான் பாராளுமன்றில் உரையாற்றிய பின்னர், பொலிஸார் என்னை கிளிநொச்சிக்கு அழைத்து சென்றிருக்கலாம். ஆனால், பொலிஸார் நேற்று (நேற்றுமுன்தினம்) என்னை கைது செய்வதில்தான் உறுதியாக இருந்தார்கள். இதுதொடர்பாக நான் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகருக்கும் அறியப்படுத்தியிருந்தேன்.

இந்த நிலையில் சில பெரும்பான்மை ஊடகங்கள், பொலிஸாரின் சார்பாக மட்டும் செய்திகளை வெளியிட்டுள்ளமையை நான் அவதானித்தேன். இவை தவறானவை. நான் ஒளிந்துக் கொண்டதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனது தந்தை கொல்லப்பட்ட போதும், வெள்ளை வான் கலாசாரம் நாட்டில் இருந்தபோதும்கூட நானும் எனது குடும்பமும் எங்கும் ஓடி ஒளியவில்லை. இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே கருதப்படுகிறது. இந்த விடயத்தில் பாரபட்சம் காண்பிக்கப்பட்டது.

பொலிஸாரின் இந்த செயல்பாடு தொடர்பாக பொலிஸாரே விசாரணை செய்வதால் இந்த விடயத்தில் நீதி கிடைக்குமா என்ற சந்தேகமும் தற்போது எழுந்துள்ளது. பொலிஸாரால் எனது உரிமைகள் மீளப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் எனது பாதுகாப்புக்கு ஏற்றதாக கருதும் அனைத்து நடவடிக்கைகளையும் சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## தேர்தல்...

கைகோத்து செயல்படுகின்றனர். அத்தகையவர்களை வெளியேற்றுவதற்கு அனைவரும் தயாராக வேண்டும்.

இவ்வாறான ஆட்சியாளர்கள் நாட்டை ஆளத் தகுதியற்றவர்கள் எனவும் அவர்களை வெளியேற்றுவது அவசியம் - என்றும் கூறினார். (ஐ)

## வவுனியா...

கைதுசெய்யப்பட்ட எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேல்நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்றைய தினம் தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது. அந்தவகையில் உயிரிழந்தவரின் உடலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள் எதிரியால் பயன்படுத்தப்பட்டிருப்பதாக மன்று திருப்தியடைந்தது.

அதற்கமைவாக எதிரி குற்றவாளியாக இனங்காணப்படுவதாக மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பளித்து அவருக்கு மரண தண்டனை உத்தரவை வழங்கினார். வவுனியாவை சேர்ந்த நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்ற நபருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் அவர் தமிழ்மக்கள் விடுதலை கழகத்தின்(புளொட்) வவுனியா வேப்பங்குளம் முகாமுக்கு பொறுப்பாக செயல்பட்டிருந்தார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் 14 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்தன. தீர்ப்பையடுத்து அவர் நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டார். (ஐ)

## சபாநாயகர்...

மீறிய செயல். எந்தக் காரணம் கொண்டும் பாராளுமன்ற சிறப்புரிமையை மீற பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமளிக்க முடியாது.

இந்த விவகாரம் சிறப்புரிமைகள் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்போது பொலிஸாருக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## ஊசி மூலம்...

வர் என்றும் ஏற்கனவே போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதாகி சிறைவாசம் அனுபவித்தவர் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சடலம் உடல்கூற்று பகுப்பாய்வுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-03)

## உள்ளூராட்சி...

பமானது.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களும் கட்சியின் முன்வரிசை தலைவர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தையடுத்து தேர்தல்கள் திணைக்களத்தை சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஐ)

## கஜேந்திரகுமார்...

பொலிஸார் தமது கடமைகளை சரிவரச் செய்துள்ளனர். ஆனால், கஜேந்திரகுமார் எம். பி. குறித்த பொலிஸாரை அச்சுறுத்தும் வகையிலும், அவர்களைத் தகாத வார்த்தைகள் கொண்டு திட்டியும் உள்ளார். இதனை வைத்துப் பார்க்கும்போது கஜேந்திரகுமார் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நடந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது" - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட கஜேந்திரகுமார் எம். பி., "அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த இடத்துக்குச் சிவில் உடையில் வந்த இருவர் தம்மை பொலிஸார் எனக் கூறினர். அவர்களிடம் நான் அவர்களின் அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்டபோது அதற்கு மறுப்புத் தெரிவித்து என்னைத் தாக்கினர்" - என்றார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இரண்டு கேள்விகளை முன்வைத்தார்.

"சிவில் உடையில் வந்து தம்மை பொலிஸார் எனக் கூறிய இருவரும் ஏன் தமது அடையாள அட்டைகளைக் காண்பிக்க மறுத்தனர்?, கஜேந்திரகுமார் எம். பி. தான் பாராளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும் எனக் கூறியபோது அவ்வளவு அவசரமாக அவரைக் கைது செய்தமைக்குக் காரணம் என்ன?" - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டார்.

இதற்குப் பொலிஸார் தமது கடமைகளைச் சரிவரச் செய்துள்ளனர் என்றும், பொலிஸார் மீது எந்தத் தவறும் இல்லை எனவும் அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

இதன்போது கஜேந்திரகுமார் எம்.பி., "அப்படியாயின் பாதுகாப்பு அமைச்சரான (டிரான் அலஸ்) உங்களின் உத்தரவின் பேரிலா என்னைப் பொலிஸார் கைது செய்தனர்?" - என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர், இந்த சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருவதால் இது குறித்து விவாதிக்க வேண்டாம் எனக் கூறினார். அத்துடன், இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

எனினும், இந்த விவாதத்தால் நேற்று பாராளுமன்றத்தில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

# மறுசீரமைப்பில் பின்தங்கிய சமூகத்தினரை பாதுகாக்கும் நடவடிக்கைகள் இல்லை!

## சுமந்திரன் எம். பி. விசனம்

கொழும்பு, ஜூன் 09

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்புகள், செயல்திட்டங்களில் வறிய மற்றும் பின்தங்கிய சமூகப் பிரிவினரைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாதமை தொடர்பில் விசனம் வெளியிட்டுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

தேர்தல் பிற்போடப்படல் உள்ளிட்ட நாட்டின் ஜனநாயகத்துடன் தொடர்புபட்ட அரசியல் விவகாரங்களை சர்வதேச நாணய நிதியம் கருத்தில்கொள்ளாமை குறித்தும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

கலாநிதி என்.எம்.பெரேராவின் 118 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நடந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

தற்போது நாட்டில் விரிவான ஜனநாயக மறுசீரமைப்பு ஏன் அவசியம்? ஏனெனில் இப்போது நாம் தோல்வியடைந்த நாடாக மாறியிருக்கின்றோம். சிலர் அதனை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தாலும், வெட்கப்பட்டாலும் அதுதான் உண்மை.

எனவே, தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளை அரசியல் சார்ந்து நிர்வாகப்பிரச்சினைகள் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லுறவு ஆகிய இரு கோணங்களிலும், பொருளாதாரம் சார்ந்து பொருளாதாரக்கட்டமைப்பு மற்றும் ஊழல் மோசடிகளுக்கான வாய்ப்பு ஆகிய இரு கோணங்களிலும் அணுகவேண்டியுள்ளது.

இவ்வாறு அணுகுவதன் ஊடாக நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கான காரணத்தைப் புரிந்துகொள்ளமுடியும். பல வருடங்களுக்கு முன்னர் பல்வேறு துறைகள் சார்ந்து வகுக்கப்பட்ட சீரான செயற்திட்டங்கள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், தற்போதைய நெருக்கடிகள் ஏற்பட்டிருக்காது என்று சிலர் கூறுகின்றனர்.

இருப்பினும் அரசியலமைப்பு உருவாக்கம், தனிச்சிங்களச் சட்டம், அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்களின் பின்னணியில் இதனை ஆராயவேண்டியுள்ளது. பெரும்பான்மையின ஜனநாயகம் பெரும்பான்மைவாதமாக மாறுவதற்கிடையில் மிக மெல்லிய இடைவெளியே காணப்படுகின்றது.

நாட்டில் அத்தகைய மாற்றம் ஏற்பட்டபோது சிறுபான்மையின மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டதுடன், அதன்விளைவாக ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே நாம் இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மூன்று தசாப்தகாலப்போருக்கு வித்திட்ட இப்பிரச்னை தற்போதும் நீடிக்கின்றது என்பதைப் பலர் உணரவில்லை. இதே போன்று தற்போது நாம் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றோம் - என்றார். (ஐ)

## தொடர்ந்தும்...

அத்துடன், நீங்கள் எங்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றீர்கள். நாம் தொடர்ந்தும் ஏமாற முடியாது. பழைய வாக்குறுதிகளை - ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டும். கடந்த காலங்களில் நடந்த பேச்சுகளில் எட்டப்பட்ட விடயங்கள் எவையும் இதுவரை நீங்கள் (ஜனாதிபதி) ஏமாற்றி வருகிறீர்கள் என்றும் ஜனாதிபதியிடம் சம்பந்தன் வலியுறுத்தினார்.

இலங்கை தமிழரசு கட்சியின் வேண்டுகோளின்பேரில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்த சந்திப்பிலேயே தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, தமிழ் மக்களின் பிரச்னைக்கு ஜூலையில் நடக்கும் பேச்சின்போது இறுதி முடிவு ஒன்றை முன்வைப்போம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், அரசியல் தீர்வு, காணி விவகாரம் உள்ளிட்ட பிரச்னைகள் குறித்து ஆராய குழு அமைத்துள்ளதாகவும். அவற்றின் அறிக்கை 2 மாதங்களுக்குள் கிடைத்துவிடும் என்றும், அதன் பின்னர் உறுதியான நடவடிக்கை எடுப்பேன். அத்துடன், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை இப்போதைக்கு நடத்தும் திட்டமில்லை என்றும் மாகாணங்களுக்கு இடைக்கால சபைகளை அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும், வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாக சபையா அல்லது தனியான நிர்வாக சபையா என்ற தமிழரசு கட்சியினரின் கேள்விக்கு ஜனாதிபதி பதில் அளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து ஏற்கனவே திட்டமிட்டபடி ஜூலை மாதம் பேச்சு நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்த மாலை 5.10 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு மாலை 6.45 மணி வரை நீடித்தது. இந்த சந்திப்பில் தமிழரசு கட்சி சார்பில் இன்றைய சந்திப்பின் போது, பெருந் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் ஆலோசகர சாகல ரத்நாயக்க மற்றும் திணைக்களங்களின் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

## அமெரிக்க...

டன் எரிபொருள் விநியோகத்துக்காக அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. தவிர, அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுடனும் எரிபொருள் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இடைக்கால

ளில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கான யோசனையை தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதியுடனான கடந்த சந்திப்பில் முன்வைத்தார். இது தொடர்பாக நேற்று காலை பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரனை சந்தித்து பேசினர்.

இந்த விடயம் தொடர்பில் விக்னேஸ்வரன் எம். பி. கூறுகையில்,

மாகாண சபைகள் தேர்தல் காலவரையின்றி பின்தள்ளப்பட்டு வரும் நிலையிலும் மாகாண அதிகாரங்கள் கணிசமாகப் பிடுங்கப்பட்டுள்ள நிலையிலும் இடைக்கால நிர்வாக சபை ஒரு சாதகமான உத்தி. இந்த நிர்வாக ஏற்பாடு உருவாக்கப்பட்டால் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறுவதை முதன்மை செயன்முறையாக கொண்டிருக்கும்.

சந்திப்பின் போது, காலத்தை இழுத்தடிக்கும் உத்தியாக பேச்சை நடத்துகிறீர்களா? இவற்றை நிறைவேற்ற முடியுமென்றால் மாத்திரம் பேச்சை தொடருங்கள் அல்லது இப்போதே பேச்சை கைவிட்டுவிடலாம் என்று தெரிவித்தேன்.

"இந்த யோசனை அருமையானது" என குறிப்பிட்ட பிரதமர், "இடைக்கால ஏற்பாட்டை உருவாக்குவதில் அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டை கொண்டுள்ளது", என்று உறுதியளித்தார். மீண்டும் விரைவில் இரு தரப்பும் பேச்சு நடத்தும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பிரிவினைவாத சக்திகளின் கைக்கூலியே சாணக்கியன்!

## அமைச்சர் அலி சப்ரி சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 09

**வெளிநாட்டு பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகவே பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் செயற்படுகின்றார் - என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றஞ்சாட்டினார்.**



பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்னையொன்றை எழுப்பிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

"வெளிநாட்டு பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாக செயற்படும் ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கின்றார். அவர்தான் ராசமாணிக்கம். இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு விருப்பம் அற்றவர்தான் அவர். இனப்பிரச்னை நீடித்தால்தான் தம்மால் அரசியல் செய்ய முடியும் என கருதுகின்றார். அதனால்தான் தீர்வைக்காணும் எமது முயற்சிக்கு எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

நாம் இனப்பிரச்னைக்கு தீர்வை காண முற்பட்டால் அதனைக் குழப்புமாறு வெளிநாட்டு பிரிவினைவாத சக்திகள் அவருக்கு ஆலோசனை வழங்கும். அந்த ஆலோசனையின் பிரகாரம்தான் அவர் கொக்கரிக்கின்றார். நேற்றும் கொக்கரித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நான் அரச வீடொன்றை வழங்கியுள்ளதாக கூறுகின்றார். அது பொய். அவ்வாறு எனக்கு வீடு வழங்க முடியாது. நான் அரச வீட்டில் வசிப்பதும் இல்லை. சொந்த வீட்டில்தான் வாழ்கின்றேன். எனவே, சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு சில்லறைத்தனமான கருத்துகளை வெளியிட முற்படக்கூடாது. "எனவும் அலிசப்ரி குறிப்பிட்டார். (அ)

# கிணற்றினுள் தவறி விழுந்து கிளிநொச்சி மாணவி மரணம்

கிளிநொச்சி, ஜூன் 09

கிளிநொச்சி பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார்.

கிளிநொச்சி, புன்னை நீராவிப் பகுதியில் அமைந்துள்ள வீட்டுக் கிணற்றில் தவறி விழ்ந்த மாணவி நேற்று முன் தினம் உயிரிழந்தார் என தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் பாவலன் பானுசா (வயது 18) என்ற மாணவியை இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பாடசாலைகள் 12ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 09



அடுத்த பாடசாலை கல்வித் தவணை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் மாணவர்களுக்கு தேவையான பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

எனினும் பாடப்புத்தககங்கள் மற்றும் சீருடைகள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் ஜூன் 12 ஆம் திகதிக்கு பின்னர் அது தொடர்பில் அறிவிக்கலாம் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ)

# சப்ரகமுவ ஆளுநர் இராஜினாமா

கொழும்பு, ஜூன் 09

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேக்கடுவ தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஜூன் 10, முதல் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2019 செப்ரெம்பர் 18 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சப்ரகமுவ மாகாண ஆளுநராக டிக்கிரி கொப்பேகடுவவை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

குறித்த மாகாணங்களின் முந்தைய ஆளுநர்களை ஜனாதிபதி பதவி விலக்கியதன் பின்னர் இந்த நியமனம் இடம்பெற்றது.

அதன்படி, வடக்கு மாகாண ஆளுநராக பி.எஸ்.எம். சார்ள்ஸ்ம், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமானும், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்கி வட்டிவீதங்கள் குறைவடையலாம்!

கொழும்பு, ஜூன் 09

எதிர்காலத்தில் நாட்டின் வட்டி வீதங்கள் குறைவடையக்கூடும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரம் நிலைபெறும் போது மக்களுக்கு அந்த நிவாரணம் வழங்கப்படும்.

பணவீக்கம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், வங்கிகள் மூலம் பொது மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

கடந்த சில மாதங்களில் வட்டி வீதம் குறைக்கப்பட்டதில் அதிகபட்ச மதிப்பு நேற்று முன்தினம் பதிவானது.

இதன்படி, 91 நாள் திறைச்சேரி உண்டியல்களுக்கான வட்டி வீதம் 2.5% குறைந்துள்ளதுடன் 182 நாள் திறைச்சேரி உண்டியல்களுக்கான வட்டி வீதம் சுமார் 3.4% குறைந்துள்ளது - என்றார். (அ)

# போதைப்பொருளுடன் தொடர்புள்ள 15 பேர் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளுடன் தொடர்புடைய15 பேர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் வழிகாட்டுதலுக்கு அமைய யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடுவோர் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் மேனன், உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் அணியினரால் 15 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கல்வியங்காடு, கோப்பாய், யாழ்ப்பாணம் , நல்லூர் பகுதிகளை சேர்ந்த 20 தொடக்கம் 30வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தின் முட்படுத்தப்படவுள்ளனர். (அ)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ஓகஸ்ட் மாதத்துக்குள் வெளிவரும்!

கொழும்பு, ஜூன் 09

2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும், விஞ்ஞான பாடங்களின் விடைத்தாள் மதிப்பீடு ஜூன் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# ஹர்ஷ நியமனம் விதிகளை மீறியது

## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 08

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்க நிதி பற்றிய குழுத் தலைவராக நியமிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால் அது நிலையியற் கட்டளைகளை மீறுவதால் இந்தச் செயல் ஒரு தவறான முன்னுதாரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் நியமனத்தை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவர் நிலையியல் கட்டளைகளை மீறி நியமிக்கப்பட்டார்.

ஹர்ஷவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பங்குக்கு நன்றி தெரிவிக்கிறோம். ஆனால் இவ்விடயத்தில் ஜனாதிபதியின் செய்த தலையீட்டை சட்டபூர்வமானதாக்க நிலையியல் கட்டளைகள் இப்போது மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதைத் தெரிவிக்கவும் விரும்புகிறோம்.

இந்த முழு விடயமும், எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியிடம் சென்று தான் காரியங்களைச் செய்யவேண்டும் என்பதையே சுட்டிக்காட்டுகிறோம்-என்றார். (அ)

# குருந்தூர்மலை விவகார வழக்கு; செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 09

குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்று தேரர்களால் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழரின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், கடந்த 12.06.2022 அன்று முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப் பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல் புத்தர் சிலை ஒன்றை நிர்மாணிக்க பூசை வழிபாடுகள் நடத்தப்பட் டன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இதில் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் சமூகஆர்வலர் ஜூட்நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் குருந்துர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்கமுற்பட்டனர் எனத் தெரிவித்து அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேசமயம், இந்த வழக்குடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் அன்றைய தினம் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ஐ)

# 255 எரிபொருள் நிலையங்களுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 09

கடந்த வாரம் 255 சிபெட்கோ விற்பனை முகவர்கள் கடந்த வாரம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் குறைந்தபட்ச கையிருப்பை பராமரிக்கத் தவறியுள்ளன என்று எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தங்களில் நிபந்தனைகளை மீறிய விற்பனை முகவர்களுக்கு எதிராக மதிப்பாய்வு செய்து தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் அவர் பணித்துள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.